இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 318 சனி, டிசம்பர் 21, 2024 15 பக்கங்கள்




# பூகோள அரசியலை அனுசரித்து காய்நகர்த்திய ஜனாதிபதி அநுர

அகிலன்

# தேசத்தின் தலைமையைப் பாசத்தூய்மையுடன் நேசித்த *கலாநிதி* சதாசிவம் மகேஸ்வரன்!

புலவர் சிவநாதன்





# இந்தியாவின் நகர்வும் தமிழர்களின் இராஜதந்திரமும்

வேல்ஸில் இருந்து அருஸ்




© 2024 இலக்கு இணையம்

# இந்திய பயணத்தின் போது அதிகார பகிர்வு குறித்து பேசவில்லை: அமைச்சர் விஜித ஹேரத்



ஜனாதிபதி அநுர குமாரவின் இந்திய பயணத்தின் போது அரசியலமைப்பு அல்லது அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு மூன்று நாள் அரசு முறை பயணமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பயணத்தில் பேசப்பட்டவை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக அழைக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது அடுத்த வருடம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதன் பிறகு உள்ளூராட்சி தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தவுள்ளதோடு, மாகாண சபைத் தேர்தலும் அடுத்த வருடம் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# ஏமனின் உட்கட்டுமானங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் - பதிலுக்கு ஏமன் ஏவுகணைத் தாக்குதல்

ஏமனின் தலைநகர் மற்றும் துறைமுகங்கள் மீது கடந்த வியாழக்கிழமை(19) அதிகாலை இஸ்ரேல் மேற்கொண்ட கடும் வான் தாக்குதல்களில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும் எரிபொருள் களஞ்சியங்கள் தீப் பிடித்து எரிந்ததாகவும் ஏமன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குதீஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீதே இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு தாக்குதல்கள் எண்ணெய் நிலையங்கள் மீதும் இரண்டு தாக்குதல்கள் துறைமுகப் பகுதி மீதும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏமனின் எரிசக்தி நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தாக்குதல்களால்



ஏமனின் பல பகுதிகளில் மின் சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் பலஸ்தீன்-2 என்ற கைப்பசொனிக் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலின் தலைநகர் பகுதியில் உள்ள படை நிலைகள் இரண்டை தாம் தாக்கி அழித்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# அமெரிக்காவுக்கு தளத்தை கொடுத்து நாட்டை அங்கீகரிக்க முயற்சி



சோமாலியாவில் இருந்து கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் பிரிந்து சென்ற சோமாலிலான்ட் என்ற நாடு இது வரையில் அனைத்துலக அங்கீகாரத்தை பெறவில்லை. எனி னும் அங்கு அமெரிக்காவின் தளம் அமைப்பதற்கு இடம்வழங்குவதன் மூலம் தமது நாட்டை அமெரிக்காவின் மூலம் அங்கீகரிக்க அந்த நாடு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஸ்யாவின் TASS என்ற ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியின் போதே அந்த நாட்டின் வொசிங்டனுக்கான பிரதிநிதி பசீர் கோத் கடந்த வியாழக்கிழமை(19) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ‘தூய்மை இலங்கை’ திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம்கள் புறக்கணிப்பு

தூய்மை இலங்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

‘தூய்மை இலங்கை’ திட்டம் என்பது வெறுமனே நாட்டை சுத்தமாக்கும் திட்டம் மாத்திரமல்ல என்றும் அது ஒட்டுமொத்தமாக நாட்டு மக்களின் மனநிலை, அவர்களது கருத்துகள் மற்றும் எண்ணங்களை மாற்றும் திட்டம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறியிருந்தார்.

ஆனால், தூய்மை இலங்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில், 18 பேர் கொண்ட இந்த செயலணியில் ஒரு சிறுபான்மை பிரதிநிதியைகூட உள்ளடக்க முடியாதா? என கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

# ரஸ்யாவின் ஏவுகணை – பதுங்கு குழிகளை வாங்கும் அமெரிக்கர்கள்

ரஸ்யா அண்மையில் உக்ரைன் மீது ஏவிய புதிய நடுத்தர ஏவுகணையான ஒரிஸ்நிக் (Oreshnik) ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்காவில் அதிகளவிலான மக்கள் பதுங்கு குழிகளை வாங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் பாதுகாப்பு பதுங்கு குழிகளின் விற்பனை கடந்த சில வாரங்களாக நான்கு மடங்கு உயர்ந்துள்ளது என survival shelter நிறுவனத்தின் பணிப்பாளர் ரொன்




கப்பார்ட் தெரிவித்துள்ளார்.

எனது தொலைபேசி தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. நாம் பதுங்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## கருணாவை அழைத்து சி.ஐ.டி. விசாரணை

# கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கடத்தப்பட்டமை குறித்து வாக்குமூலம் பதிவு



கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 ஆம் ஆண்டு கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கொழும்பில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு மட்டக்களப்பு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த போது இனம் தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுப் பின்னர் காணாமலாக்கப்பட்டார்



தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# குடிநீருக்கான தடையும் இனஅழிப்பே – மனித உரிமைகள் கண்காணிப்பகம்

காசாவில் உள்ள மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை இஸ்ரேல் தடை செய்துள்ளது என்பது ஒரு இன அழிப்பாகவே கருதப்பட வேண்டும் எனவே அனைத்துலக சமூகம் இஸ்ரேல் மீது தடைகளை கொண்டுவர வேண்டும் என வொசிங்டனைத் தளமாகக் கொண்ட அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வியாழக்கிழமை(19) வெளியிட்ட தனது 184 பக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது.



கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் இருந்து இஸ்ரேல் காசா பகுதி மீது தாக்குதல்களை நடத்தி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொடர்ந்து தஞ்சமடையும் ரோஹிங்கியா அகதிகள்:

## எப்போது முடிவுக்கு வரும்?

கடந்த 2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மியான்மரின் ரக்ஹைன் பகுதியில் உள்ள இராணுவ அரண்கள் மீது முஸ்லீம் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர். ரோஹிங்கியா பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற வலியுறுத்தலில் நடத்தப்பட்ட தாக்குதலை காரணம்காட்டி மியான்மர் இராணுவம் தேடுதல் வேட்டை நடத்தியது. இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் வங்கதேசத்தில் தஞ்சமடைந்தனர். அப்போது மியான்மர் இராணுவத்தின் நடவடிக்கையை இனச்சுத்தகரிப்பு என ஐ.நா. சுட்டிக்காட்டியிருந்தது.



அத்தோடு வங்கதேசத்தைத் தொடர்ந்து இந்தோனேசியா, மலேசியா, அவுஸ்திரேலியா இந்தியா, நேபால் போன்ற நாடுகளுக்கும் தஞ்சம் கோரி அகதிகளாக செல்கின்றனர் ரோஹிங்கியாக்கள்.

இந்தியாவை பொறுத்தமட்டில் நாடெங்கும் 40,000 ரோஹிங்கியா அகதிகள் வசிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதில் 14,000 அகதிகள் மட்டுமே பதிவு செய்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

மேலும் ரோஹிங்கியா அகதிகள் மியான்மருக்குத் திரும்புவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லாத நிலையில், ரோஹிங்கியாக்களின் தஞ்சக்கோரிக்கைத் தொடர்கின்றது.



இந்த நிலையில், தமிழர் தாயகமான வடமாகாணத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் கடந்த 19ம் திகதி மியன்மார் படகு ஒன்று 115 ரோஹிங்கியாக்களுடன் கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகில் வந்தவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் துறைராசா உடன் சென்று பார்வையிட்டிருந்தார். காவல்துறையினர், கடற்படை பொது மக்கள் என அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கியிருந்தனர். பின் அவர்களை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்துக்கு கடற்படை அழைத்துச் சென்றுள்ளது.

இந்த படகில் பயணித்த 115 அகதிகளும் அஷ்ரப் துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டு சுகாதார பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் கர்ப்பிணித் தாய் ஒருவர் உட்பட 27 பெண்களும் 49 சிறுவர்களும் 39 ஆண்களும் அடங்குகின்றனர்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

# ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்ய இயலாமைக்கான முக்கிய காரணங்கள்

முதலில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் கால வாழ்த்து. மேலும் கழிந்து கொண்டிருக்கும் 2024ம் ஆண்டில் ஈழத்தமிழர்களின் தாயகத்தில் "தப்பிப்பிழைக்கும்" வாழ்வியல் முறைமைக்குள் ஆக்கிரமிப்பு அரசான சிறிலங்கா அரசாங்கத்தின் அரசுத்தலைவர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஈழத்தமிழர்கள் எதிர்கொண்டனர். 2025ம் ஆண்டுத் தமிழ் சிங்கள புத்தாண்டுக்குள் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியும் உள்ளனர். நடந்து முடிந்த இரண்டு தேர்தல்களிலும் ஈழத்தமிழர் தேசிய நீக்கத்துக்கும் இறைமை நீக்கத்துக்கும் தன்னால் இயன்றதை எல்லாம் என்றும் செய்யும் சிங்களக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியினர் தாம் ஆட்சி அமைப்பதற்கான கூட்டணியாக மற்றைய சிங்களக் கட்சிகளுடன் உருவாக்கிய தேசிய மக்கள் சக்திக்கு ஈழத்தமிழின அழிப்பால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களில் ஈழத்தமிழர்கள் வாக்குகளால் அரசியல் பணிவை வெளிப்படுத்தியமை வேதனையான வரலாற்றுப்பதிவாக உள்ளது.

இதற்கு ஈழத்தமிழர் தாயகப் பகுதிகளில் கடந்த 15 ஆண்டுகளாக ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் சிங்கள இறைமைகளின் சமத்துவம் குறித்து அரசியல் மட்டத்தில் பேசாமல் விட்டதனால் ஈழத்தமிழரின் இளம் சமுதாயத்தினர் அரசியல் அறியாமைக்குட்பட்டு ஈழத்தமிழ்த் தேசியத்தில் இருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொண்டமை முதல் காரணம். அவ்வாறே ஈழத்தமிழ்ப் பெண்களின் சனநாயகப் பங்களிப்பு மறுக்கப்பட்டு வருவது அடுத்த காரணம். சிறிலங்கா நாடாளுமன்றத்தில் பெண் உறுப்பினர் எண்ணிக்கை 13 இலிருந்து 22 ஆக அதிகரித்துள்ள இன்றைய நிலையில் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சந்தித்த தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து ஒரு பெண் கூட தெரிவாகாததும் தேசியப் பட்டியலில் கூட இடம்பெறாததும் ஈழத்தமிழரின் பெண்ணடிமைத்துவ வெளிப்பாடே. அவ்வாறே பல இளையவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் தேர்தலில் குழுக்களாகப் போட்டியிட்ட போதும் எவருமே உறுப்பினராகாது, கட்சிகளும் கட்சி மனோநிலையில் மக்களை அணுகிய மருத்துவர் அர்ச்சுனா இராமனாதனும்தான் உறுப்பினரானமை ஈழத்தமிழரிடை இளையவர்களின் சனநாயகப் பங்களிப்பு மறுக்கப்படுவதைத் தெளிவாக்கியுள்ளது. இந்த இளையோர் பங்களிப்பு மறுப்பும் பெண்கள் பங்களிப்பு மறுப்புமே ஈழத்தமிழர் தங்கள் இறைமையை மீளுறுதி செய்ய இயலாமைக்கு முக்கிய காரணங்கள் என்பதுடன் ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதி செய்வதற்கான தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆட்பலமின்மைக்கும் காரணமாகிறதென்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது.

மேலும் தேசிய மக்கள் சக்தியினர் சிங்கள பௌத்த பேரினவாதக் கோட்பாட்டில் கொண்டுள்ள மிக்க உறுதி காரணமாக பாரத் இந்திய கூட்டாண்மை இலங்கைத் தீவில் இந்தியாவுக்குப் பயனளிக்கக் கூடிய முறையில் தொடர்வதையே மாற்றியமைக்க முயன்று வருகின்றனர். சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுரகுமரதிசநாயக்காவின் இந்தியாவுக்கான அணுகுமுறைப்பயணம் இதனை மீளுறுதி செய்துள்ளது. 1987ம் ஆண்டின் இந்திய சிறிலங்கா உடன்படிக்கை உயிரோடிருப்பதை உறுதிப்படுத்தும் மாகாணசபை முறைமையையும் அதன் தொடர்ச்சியாக இந்தியா முன்மொழியும் தமிழர்களின் கண்ணிய வாழ்வுக்கான அடித்தளமான 13 வது திருத்தத்தையும் வலியுறுத்தி இந்திய சிறிலங்கா கூட்டு அறிக்கையில் ஒரு சொல் கூட இந்தியாவாலேயே பேசஇயலாது போயுள்ளது. இதனை இந்தியாவின் முக்கிய ஆங்கில நாளிதழான "த இந்து" தனது பெரும்பாலும் பழைய நிலையிலேயே — சிறிலங்காவின் அரசுத்தலைவரின் இந்திய வருகை ("More of the same : On the Sri Lankan President's India visit") என்ற தனது 18.12.24ஆம் திகதிய ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. கூடவே அதானியின் சிறிலங்காவிலான முதலீடுகள் விடயத்திலும் தேசிய மக்கள் சக்தியினரின் நிலைப்பாட்டை இந்தியாவால் மாற்ற இயலாதிருப்பதையும் கூட்டறிக்கை தெளிவாக்கி இந்தியா இலங்கையில் பொருளாதார ரீதியாகத் தலையிடும் உரிமையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை உலகிற்குத் தெளிவாக்கியுள்ளது. இந்தியா திருகோணமலையை தனது இந்தியத் துணைக்கண்டப் பிராந்தியத்தில் பொருளாதார மையமாக அமைத்து இணைப்புக்கள் வழி தனது பிராந்திய மேலாண்மையை உறுதிப்படுத்தும் திட்டங்களையோ அல்லது அதானியின் வழி இந்தியா மன்னாரிலும் கொழும்பிலும் மீண்டெழும் சக்திகள் துறையிலோ அல்லது அனைத்துலக வர்த்தக நிலையிலோ தன்னை உறுதிப்படுத்த முயற்சித்து வரும் பொருளாதாரத் திட்டங்களையோ குறித்து கடந்த ஆண்டு யூலையில் ரணில் - மோடி வெளியிட்ட தொலைநோக்குப் பார்வையின் எந்த உடன்படிக்கையிலும் மீள்கையொப்பமிடாது மிகத் தந்திரமாக இந்தியாவை விவசாயத்துறையில் உதவியளிக்கும் பணியாளராக அமைத்துக்கொண்டமை கடந்த வாரத்து அநுர ஆட்சியின் சாதனை நிகழ்வாக உள்ளது. இவ்வாறு தங்களை விட்டுக்கொடுக்காது கொள்கை உறுதிப்பாட்டுடன் இந்தியாவுடன் மட்டுமல்ல யாருடனும் பேசும் ஆற்றல் இன்று உள்ள எந்தத் தமிழ் அரசியல்வாதிக்கும் இல்லை என்பது வேதனையான உண்மை.

மேலும் இந்தியாவில் இருந்து சிறிலங்கா வந்தவுடனேயே சீன அரசியல் குழுவின் முக்கிய ஆலோசகருடன் கொழும்பில் அநுரகுமார திசநாயக்கா நடத்தியுள்ள சந்திப்பும் அதன் தொடர்ச்சியாகப் புதிய ஆண்டு தொடங்கியவுடனேயே சீனாவுக்குச் செல்லவிருப்பதும் அமெரிக்காவுக்கும் சிறிலங்காவுக்கும் முன்னைய அரசத்தலைவர்களின் காலங்களில் செய்து கொள்ளப்பட்ட மறைமுக உடன்படிக்கைகளையும் கடந்த சிங்கள இறைமையினை உறுதிப்படுத்தும் துணிவான முயற்சிகளில் இறங்கியுள்ளதும் இவ்வார நிகழ்வுகளாக உள்ளன. இதனால் இந்தியா அதிர்ந்து போயுள்ளதை இந்திய ஊடகங்கள் இவ்விடயத்தில் காட்டிய அக்கறைகள் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளன. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுடன் ராஜதந்திர உறவாடலைச் செய்ய இயலாதவர்களாக இருப்பது மற்றொரு வேதனை தரும் விடயம்.

சிங்கள முதலாளித்துவக் கட்சிகளின் அரசியல் படுகொலைகளால் 89000 பேரையிழந்த நிலையிலும் மக்கள் விடுதலை முன்னணி சிங்கள இளையோர்கள் பெண்கள் கிராமமக்கள் இடையிருந்து தமக்கான வாக்குப் பலத்தை மீளப் பெற்றமையே இன்று அதனால் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய பரிணாமத்தில் அரசினையே அமைக்க முடிந்தது. ஆனால் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளால் இத்தகைய மக்கள் மீள்பலத்தை உருவாக்க இயலாமையே இன்று ஈழத்தமிழர்களை சிவிக்தேசியம் என்ற அமெரிக்க வரைவிலக்கணத்துள் அடக்கி அவர்களின் தேசிய நீக்கத்தையும் தாரண்மைவாத தேசப்பற்று என்ற அமெரிக்க சிந்தனையுள் அடக்கி அவர்களின் தாயகம் மீதான இறைமை நீக்கத்தையும் புதிய அரசியல் அமைப்பால் அநுர அரசு உறுதிப்படுத்த முயலும் அபாய நிலை தோன்றக் காரணமாகவுள்ளது.

இந்நிலையிலாவது 2025இல் தேசிய ஒருமைப்பாடு இல்லாது இறைமையை மீளுறுதி செய்ய இயலாது என்பதை ஒவ்வொரு ஈழத்தமிழரும் மனதிருத்தி தேசிய ஒருமைப்பாட்டுக்கான முயற்சிகளில் உடன் இறங்குவோம் என புத்தாண்டு உறுதி மொழி எடுக்க வேண்டுமென்பதே இலக்கின் புத்தாண்டு அழைப்பாகவுள்ளது.

**ஆசிரியர்**

# பூகோள அரசியலை அனுசரித்து காய்நகர்த்திய ஜனாதிபதி அநுர

அகிலன்



ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க மூன்று நாள் விஜயமாக இந்தியா சென்று திரும்பியிருக்கின்றார். இந்த விஜயம் அதிகளவுக்கு ஊடக கவனத்தைப் பெற்றிருந்தது. குறிப்பாக இந்திய ஊடகங்கள் அவரது விஜயம் குறித்த செய்திக்கு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தன. புதுடில்லியில் வந்து இறங்கிய போது அநுரகுமார திசநாயக்கவை இந்திய அமைச்சர் எல்.முருகன் வரவேற்றது கொழும்பு ஊடகங்களில் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது.

அநுரவின் டில்லி விஜயம் முக்கியத்துவம் பெற்றமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று - அவர் இந்திய எதிர்ப்பை தமது பிரதான கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த கட்சி ஒன்றின் தலைவர் என்பது. இரண்டு, ஜே.வி.பி. ஒரு சீன சார்பு அமைப்பாக அடையாளம் காணப்பட்டிருந்தது. ஜே.வி.பி.யின் வளர்ச்சியில் கடந்த காலங்களில் சீனா சம்பந்தப்பட்டிருந்தது.



இலங்கையை மையப்படுத்திய சீன - இந்திய வல்லரசுப் போட்டி இப்போது தீவிரமடைந்திருக்கும் பின்னணியில், அநுர எவ்வாறு காய்களை நகர்த்தப்போகின்றார் என்பதை இராஜதந்திர வட்டாரங்கள் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருந்தன. தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டவராகவே அநுரவின் அணுகுமுறை காணப்பட்டது.

கடந்த கால ஜே.வி.பி.யின் வரலாறு எவ்வாறிருந்தாலும், இந்தியா குறித்த கடும் போக்கை ஜனாதிபதி மாற்றிக்கொண்டிருக்கின்றார் என்பது இந்த விஜயத்தின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. பூகோள அரசியலை அனுசரித்துச் செல்ல வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து கொண்ட ஒருவராகவே ஜனாதிபதியின் அணுகுமுறை இருந்தது. இந்தியாவை தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்துக்கு அவர் தெரிவு செய்ததன் மூலமாகவே அதனை அவர் உணர்த்தியிருந்தார்.

இந்த விஜயத்தின் போது பின்வரும் ஐந்து அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.



முதலாவது, இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் முயற்சிகளுக்கு இந்தியா வழங்கிய உதவிக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். இரு நாடுகளும் வர்த்தகம், சக்திவளம், மற்றும் கட்டமைப்பு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தின.

இரண்டாவது, இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் இலங்கை நிலம் பயன்படுத்தப்படாது என்று ஜனாதிபதி அநுர உறுதியளித்தார்.

மூன்றாவது, இலங்கை, பிரிக்ஸ் *(BRICS)* அமைப்பில் உறுப்பினராக சேர்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்தியா அதற்கு சாதகமாக பதிலளித்தது.

நான்காவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்று தான் நம்புவதாக தெரிவித்தார். இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கான வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார். அதேபோல மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் மோடி குறிப்பிட்டார்.

ஐந்தாவதாக, இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது.

இலங்கையின் நிலப்பகுதி இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று இலங்கை ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி புதுடில்லி எதிர்பார்த்த முக்கியமான விடயம். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுடன் மூன்று மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் அநுர இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டிருந்த நிலையில் அதனை அப்போது டோவாலிடம் தெரிவித்திருந்த அவர், இப்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள பின்னணியில், இந்தியப் பிரதமரிடமே அதனை நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறான வாக்குறுதி ஒன்றை இந்தியா எதிர்பார்த்தமைக்குக் காரணம் இருந்தது. சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் அடிக்கடி இலங்கைக் கடற்பகுதிக்குள் வந்து செல்வதும், கடலாய்வுகள் என்ற பெயரில் சீனத் தரப்பினர் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் புதுடில்லிக்கு எப்போதும் கவலையைக்கொடுத்துக்கொண்டிருந்தது. இந்தியாவின் கவலைகளையடுத்து வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு ரணில் விக்கிரமசிங்க ஒரு வருட காலத்துக்குத் தடை விதித்திருந்தார். அந்தத் தடை இம்மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தத் தடையைத் தொடருமா என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கும் நிலையில்தான், பொதுவான முறையில், “இலங்கையின் நிலப்பகுதி இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது” என்று ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.



இலங்கையின் முக்கிய துறைமுகங்களான கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகியவற்றில் சீனாவின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கின்றது. இதனால், சீனாவின் செல்வாக்கை முற்றிலுமாக ஒதுக்க முடியாது என்ற கருத்தும் உள்ளது. “சீனாவின் கப்பல்கள் வந்து செல்லலாம். ஆனால், அவை இந்தியாவின் பாதுகாப்புக்கு எவ்வகையிலும் குந்தகமாக அமையாது” என்ற ஒரு நிலைப்பாட்டைத்தான் அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை, கடல்சார் சட்டங்களை *(UN-*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அநுர ஆட்சியில் தமிழினத்தின் ஆதங்கம் தீருமா?

பா.அரியநேத்திரன்

2024 செப்டம்பர் 21,ல் இலங்கையின் 9,வது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.அந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக சிலின்டர் சின்னத்திலும்,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,ஐக்கிய மக்கள் சக்தி தொலைபேசி சின்னத்திலும்,அநுரகுமார திசநாயக்கா தேசிய மக்கள் சக்தி திசைகாட்சி சின்னத்திலும், முன்னாள் ஜனாதிபதியின் மகிந்த ராசபக்சவின் மகன் நாமல் ராசபக்ச பொதுசன பெரமுன கட்சி மொட்டுச்சின்னத்திலும், தமிழ்பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் சுயேட்சையாக சங்கு சின்னத்திலும் அவர்களுடன் மொத்தமாக 38 பேர் போட்டியிட்டனர்.

இதில் புதிய ஜனாதிபதியாக அநுரகுமாரதிசநாயக்கா 5,634,915 வாக்குகளையும், 42.31% விழுக்காட்டுடனும் தெரிவானார்.

அவர் தெரிவாகி மூன்று நாட்களால் 2024 செப்டம்பர்24 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் 2024, நவம்பர்,14,ல் இடம் பெற்றது.

இந்த பொதுத்தேர்தலில் இலங்கையின் சரித்திரத்தில் முதல்தடவையாக மிக அதிகப்படியான 159, ஆசனங்களை ஒரே கட்சி தேசிய மக்கள்சக்தி பெற்று ஆட்சியமைத்துள்ளது.

அந்த ஆட்சியமைத்து இன்றுடன் (21/12/2024) சரியாக 27 நாட்கள் மட்டுமே கடந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் ஜனாதிபதி பதவி ஏற்றவுடன் புதிய ஆளுநராக பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவையும்,

திருகோணமலை மட்டக்களப்பு இரண்டு மாவட்டங்களின் அபிவிருத்தி குழு தலைவராக பிரதி அமைச்சர் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அருண் கேமச்சந்திரனை நியமித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக அபூபக்கர் ஆதம்வாவா நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினராக கந்தசாமி பிரபு என்பவர் தெரிவாகியுள்ள நிலையிலும் அவரை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திகுழு தலைவராக நியமிக்கவில்லை ஏன் அவர் ஆளுமையற்ற பாராளுமன்ற உறுப்பினர் என்பதை ஜனாதிபதி அநுராவின் செயல் தெளிவாக காட்டியுள்ளது.

மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விடயங்களை கையாள வேண்டியது அந்தந்த மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தும் மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவருமாகும்.

ஆனால் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் அதே மாவட்டத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவராக நியமித்த ஜனாதிபதி மட்டக்களப்புக்கு தலைமைதாங்க திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரை இறக்குமதியாக்கியுள்ளார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் 22, மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தேசிய மக்கள் சக்தி பின்னடைவை கண்டது அங்கு தமிழரசுக்கட்சி வழமை போன்றே மூன்று ஆசனங்களை பெற்றது. அவ்வாறு இருந்தும் ஒரே யொரு உறுப்பினர் தேசிய மக்கள் சக்தி மூலம் தெரிவாகினார். அவருக்கு மாவட்ட அபிவிருத்திகுழு தலைவர் பதவியை வழங்காமல் அவரை பொம்மையாக பெயரளவில் வைத்து திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருக்கு அபிவிருத்தி குழு பதவி வழங்கியது மட்டக்களப்பு மாவட்டமக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. அவரை பொருத்தமான பாராளுமன்ற உறுப்பினராக கருதப்படவில்லை என்பதே உண்மை.



கிழக்குமாகாணத்தை மட்டுமல்ல வடமாகாணத்திலும் இதே நிலைதான் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகி உள்ளனர் அவர்களும் பேசாமடந்தைகளாகவே செயல்படுவதையே கடந்த 27, நாட்களில் நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது யாழ்மாவட்டத்துக்கும் அங்கே மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கருணானந்தன் இளங்குமாரன்,சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜன், ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன் ஆகியோரை யாழ்மாவட்ட மக்கள் பெரும் எதிர்ப்பார்ப்புடன் வாக்களித்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாக வைத்தாலும் அவர்களில் ஒருவரை கூட அமைச்சராகவோ, பிரதி அமைச்சராகவோ, அபிவிருத்திக்குழு தலைவராகவோ யாழ்ப்பாண மாவட்டத்தில் நியமிக்கவில்லை,

கடல்வளமீன்பிடி அமைச்சர் சந்திரசேகரம் மலையகத்தை சேர்ந்தவரே யாழ்ப்பாணத்தையும் கவனிக்கும்படியாக தேசியபட்டியலும் வழங்கி மேலதிகமாக அபிவிருத்தி குழு தலைவராகவும் அவரை அழகுபார்த்துள்ளார் ஜனாதிபதி.

இருந்தபோதும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் சரியோ தவறோ நடத்தப்பட்டுவிட்டது, ஆனால் இதுவரை கிழக்கு மாகாணத்தில்எந்தஒருஅபிவிருத்திக்கூட்டங்களும் இதுவரை கூட்டப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரை விவசாயம், மீன்பிடி(ஆழ்கடல், வாவி, குளம்) கால்நடை வளர்ப்பு, உள்ளன அதில் இன்று பேசும் பொருளாக உள்ளது கால்நடைகள் மேயும் மேச்சல் தரை விவகாரம் இதற்கு மிகவும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது. மேச்சல்தரை விவகாரம் காலம் காலமாய் பேசும் பொருளாக மாறிவிட்டது யார் ஜனாதிபதியானாலும், யார் ஆட்சியமைத்தாலும் மயிலத்தமடு, மாதவனை, கெவிளியாமடு மேச்சல் தரைகள் தொடர்ச்சியாக சிங்கள குடியேற்ற பூமியாக மாறிக்கொண்டிருக்கிறது.

தினமும் மாடுகளை கொலைசெய்தல், காணிகளில் அத்துமீறி குடியேறுதல் என தொடர் கதையாக உள்ளது.

இந்த அத்துமீறலை தடுக்க பல பேச்சுக்கள், வழக்குகள், ஆர்ப்பாட்டங்கள் என எதை செய்தாலும் அதை கணக்கெடுப்பதாக எந்த ஆட்சியாளர்களும் இதுவரை இல்லை.

சித்தாண்டி சந்தியில் கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக கடந்த 2023 மே மாதம் தொடக்கம் தொடர் போராட்டமாக செய்கின்றனர் அது நீடித்து செல்கிறது எவருமே அதனை தீர்க்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது செங்கலடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அவரின் வருகையை எதிர்த்து கொம்மாதுறையில் கடந்த 2023 அக்டோபர் 7ஆம் திகதி பண்ணையாளர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்,அரசியல் வாதிகள், சிவில் செயல்பாட்டாளர்கள் என பலர் எதிர்ப்பு கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டபோது அதற்கான தீர்வு வழங்கப்படவில்லை போராட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஷ்வரன் உட்பட சிவில் அமைப்பு பிரதிநிதிகள் பண்ணையாளர்கள் என மொத்தமாக 37, பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிசார் கடந்த 28/10/2023 வழக்கு தாக்கல் செய்து இதுவரை 7, தவணைகள் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டும் முடிவின்றி அடுத்த தவணை எதிர்வரும் 2025, ஜனவரி.22, ம் திகதி மீண்டும் அந்த வழக்கு உள்ளது.

பண்ணையாளர்களுக்கு மேச்சல் தரையில்லை அதனை கேட்டு கவன ஈர்ப்பு போராட்டங்களை செய்தால் பொலிசாரால் வழக்கும் இழுபறி, மேச்சல்தரையும் இழுபறி என்ற நிலைமை மட்டக்களப்பு பண்ணையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் காலமெல்லாம் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டும் புதிய ஜனாதிபதி அநுராவால் அது எந்தளவில் தீர்ப்பார் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

இதே நிலையில்தான் அம்பாறை மாவட்டத்திலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தை பூரணமாக செயல்படும்படியாக கணக்காளர் நியமிக்கப்பட்டார்.

அந்த பிரதேச செயலகம் முழுமையான பிரதேச செயலகமாக மாற்றுமாறு கூறி பல வருடங்களாக கவன ஈர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றுவருகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் காலத்திலும் இந்த போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்றும் எந்த பலனும் இல்லை.

ஏற்கனவே ஜனாதிபதிகளாக இருந்த மகிந்த ராஷபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க எல்லோருமே முஷ்லிம் அரசியல் வாதிகளின் தயவால் ஆட்சி பீடம் ஏறியவர்கள் அதனால் முஷ்லிம் அரசியல் வாதிகளை புறம்தள்ளி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்ந்த முடியாமல் அவர்கள் நாடகம் ஆடினர் என்பது உண்மை. ஆனால் இப்போதய தேசிய மக்கள் சக்தி அரசானது யாருடைய தயவிலும் அவர்கள் ஆட்சியமைக்கவில்லை 159, அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களை கொண்ட இப்போதய அரசு கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை தீர்ப்பதற்கு முயலவேண்டும் அப்போதுதான் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கா பாராளுமன்றத்தில் ஆற்றிய அக்கிராசன உரையில் கூறிய சமத்துவமான நீதி எல்லா மக்களையும் சென்றடையும்.

கடந்த 16, ம் திகதி இந்தியப்பிரதமருடன்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தேசிய மக்கள் சக்தி, முஸ்லிம் மக்களை அரவணைக்கத் தவறுகின்றதா?

ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம் சமூக அமைச்சர்கள், ஒவ்வொரு அரசாங்க ஆளும் தரப்பு அமைச்சரவையிலும் இருந்து வந்துள்ளனர். அப்போதும் அவர்களின் நலன் சார்ந்த பிரச்சினைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. இப்போது அநுர குமார அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னும் முஸ்லிம் சமூகத்தின் நிலை பல குறைபாடுகளுடன் காணப்படுகின்றன.

அண்மைக் கால அரசியல் போக்கின் பிரகாரம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளை மதிக்காக அளவுக்கு வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல தேசிய மட்டத்திலும் பல இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளனர். பெரும் வாக்கு வங்கிகளால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்ற அநுர அரசாங்கம் தற்போது முஸ்லிம் சமூகத்தை பேசு பொருளாக மாற்றியுள்ளது. குறிப்பாக அமைச்சரவையில் அமைச்சர் பதவி வழங்கப்படாமல் புறக்கணிப்பு செய்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவிக்கையில்



இந்த அரசு முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் செயற்படுவது கவலையைத் தருகின்றது

முஸ்லிம் மக்களும் இந்நாட்டின் பிரஜைகள். அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமூகங்களைப் போன்று கௌரவத்துடன் இந்நாட்டில் வாழ விரும்புகின்றது. இந்நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச்சரவையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசாங்கம் நியமித்த அமைச்சரவையில் முஸ்லீம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமூகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமூகவலைத்தளங்களை அவதானிக்கின்ற போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசாங்கத்தின் கடந்த குறுகிய கால செயற்பாடுகள் சிலவற்றை பார்க்கும் போது முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கும் இருக்கின்றதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 தவிசாளர் பதவிகளில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளரும் நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் பேசு பொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல இந்த அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்ட போது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயர் வெளிவரவில்லை. பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெயரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசாங்கம் நியமித்துள்ள அமைச்சரவையில் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான இனத்துவேசத்தை விதைத்து ஆட்சிக்கு வந்த கோத்தாபாய ராஜபக்ஸ அரசாங்கத்தின் அமைச்சரவையில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உதாரணங்களை வைத்து நோக்கும் போது இந்த அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இருப்பது போலவே எனக்குத் தோன்றுகின்றது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அளிக்கப்பட்டுள்ள சுமார் 15 இலட்சம் முஸ்லிம் வாக்குகளுள் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் திசைகாட்டிக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் அளிக்கப்பட்டுள்ள வாக்கு விபரங்களை அணுகி ஆராய்கின்ற போது இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

முஸ்லிம்களின் இந்தளவு பெரிய எண்ணிக்கை வாக்குகளைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் புரிந்து செயற்பட வேண்டும்

அண்மையில் வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் அக்குரணையில் முஸ்லிம்களுடனான சந்திப்பின் போது தெரிவித்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை.



தேசிய மக்கள் சக்தியில் வெற்றி பெற்ற முஸ்லிம்களுக்கு அனுபவம் போதாமையினாலேயே அமைச்சரவையில் அவர்கள் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று அமைச்சர் அங்கு தெரிவித்திருந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மூலம் தெரிவான 159 பேரில் எத்தனை பேர் கடந்த கால பாராளுமன்ற அனுபவங்களைப் பெற்றவர்கள், தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களுள் எத்தனை பேர் கடந்த கால அமைச்சு அல்லது பிரதியமைச்சு அனுபவம் பெற்றவர்கள் என்பதை அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் ஒரு சிலரைத்தவிர ஏனைய அனைவரும் புதியவர்கள் தான். அவர்களுள் பலருக்குத்தான் அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல குறைந்த பட்சம் முஸ்லிம் ஒருவருக்கும் அமைச்சு வழங்கியிருக்கலாம். இதனை வழங்குகின்ற மன நிலை தேசிய மக்கள் சக்திக்கு இல்லை. இதனை மறைப்பதற்காகத் தான் அனுபவக்குறைவு கதையை அமைச்சர் சொல்கின்றார் என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது.

இதனைவிட அந்த சந்திப்பிலே முஸ்லிம் அமைச்சர் நியமனம் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் விஜித ஹேரத் பதிலளிக்கும் பாணியை பாருங்கள். அப்போது அவர்களது உள்ளத்தில் என்ன இருக்கின்றது என்பது மிகத் தெளிவாகத் தெரியும்.



அமைச்சர் நியமனத்தில் முஸ்லிம்களுக்கு அனுபவமில்லை என்று கூறும் அமைச்சர் ஹேரத் ,அமைச்சு செயலாளர்களில் முஸ்லிம்கள் நியமிக்கப்படாமை குறித்து என்ன சொல்லப் போகின்றார்.

தற்போதைய அமைச்சுச் செயலாளர்களில் இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றார்கள். எனவே, இலங்கை முஸ்லிம்களில் துறைசார்ந்த ஒருவராவது அமைச்சுச் செயலாளர் பதவிக்கு பொருத்தமானவர் இல்லையா? என்பதை அமைச்சர் தெளிவு படுத்த வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் ஒருவருக்கு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் வழங்கியமையை தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் மக்களுக்கு வழங்கிய பெரிய அருட்கொடை போல அமைச்சர் ஹேரத் சொல்கிறார்.

கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தல் மூலம் அம்பாறை மாவட்டத்தில் ஹரீஸ், பைசல் காசீம், அதாவுல்லா, முஸர்ரப் என நான்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் முஸ்லிம் வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு அளிக்கப்பட்டதால் தான் அம்பாறை மாவட்ட மக்கள் இரண்டு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இழந்தனர் என்பதை தேசிய மக்கள் சக்திக்கு தெளிவு படுத்த விரும்புகிறேன்.

இந்த 60 ஆயிரம் வாக்குகளில் சிலநூறு வாக்குகள் கேஸ் சிலிண்டர் சின்னத்துக்கு அளிக்கப்பட்டிருந்தால்அங்கு ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டிருப்பார். ஏனைய வாக்குகளைமரத்துக்கோமயிலுக்கோ முஸ்லிம்கள் அளித்திருந்தால் அங்கும் இரண்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். இதன் மூலம் கடந்த முறையைப் போல 4 உறுப்பினர்களைப் பெற்றிருக்கலாம்.

**தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் மக்களை அரவணைக்க தவறுகிறதா:**

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# புதிய அரசியல் யாப்பு மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு தருமா?

துரைசாமி நடராஜா

புதிய அரசியல் யாப்பினை உருவாக்கும் முயற்சி தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. சமகால அரசியல் யாப்பின் அதிருப்திகள் இதற்கு வலுசேர்த்து வருகின்றன. இந்நிலையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படுமிடத்து மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பலவற்றுக்கும் அந்த யாப்பு தீர்வாக அமைய வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தி இருக்கின்றார்.



ஒரு நாட்டின் அரசியல் யாப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. ஆட்சிபற்றிய விதிகளை வரையறுத்துக் கூறும் அரசியல் யாப்பானது ஓர் அரசாங்கத்தின் அமைப்பு அதனுடைய அதிகாரம், கடமை, மக்களின் அடிப்படை உரிமைகள், அரசியல் யாப்பினை மாற்றும் அல்லது திருத்தும் வழிமுறைகள், ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்புகள், சமஷ்டி ஆட்சி முறையாயின் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான அதிகாரப் பங்கீடு போன்ற பலவற்றையும் வலியுறுத்துவதாக அமைந்திருக்கும். இந்நிலையில் ‘அரசாங்கத்தின் அமைப்பையும், அதன் உறுப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வையும் அமுல் படுத்த தேவையான பொதுக் கொள்கைகளையும் நிர்ணயிக்கக்கூடிய எழுதப்பட்ட, எழுதப்படாத சட்டங்களின் தொகுப்பே அரசியல் யாப்பாகும்’ என்று அறிஞர் கில்கிறைஸ்ட் குறிப்பிடுகின்றார். இதேவேளை ‘அரசாங்கத்தின் அமைப்பையும், தொழிற்பாடுகளையும் கடமைகளையும் பற்றி கூறும் விதிகளின் தொகுப்பே அரசியல் யாப்பாகும்’ என்பது அறிஞர் ஹென்றி மெயினின் கருத்தாகவுள்ளது.

இன்று பெரும்பாலான நாடுகளில் ஜனநாயகஆட்சிமுறை நிலவுகின்றது. இந்தஜனநாயக ஆட்சி முறையினை வலுப்படுத்துவதற்கும், நிலைப்பேற்றிற்கும் உறுதியான அரசியல் யாப்பு உந்துசக்தியாக அமைகின்றது. அரசியல் யாப்பானது ஆட்சியாளர்களின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து ஒரு முறையான பாதையில் அவர்களை பயணிக்க வைக்கின்றது. இந்நிலையில் சர்வாதிகாரப் போக்கினை தடை செய்யவும், அதனூடாக ஜனநாயகம் சிறப்பாக பேணப்படுவதற்கும் யாப்பு உச்சகட்ட பங்களிப்பினை வழங்குகின்றது. நாடுகளின் தலையெழுத்தினை அரசியல் யாப்பே தீர்மானிக்கின்றது.

### அழிவுக்கு அடித்தளம்

இந்த வகையில் இலங்கையின் கடந்தகால மற்றும் சமகால அரசியல் யாப்புகள் குறித்து நோக்குகின்றபோது, இந்த அரசியல் யாப்புகள் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுத்தனவா? நாட்டின் அபிவிருத்திக்கு உரியவாறு தோள் கொடுத்துள்ளனவா? ஒன்றுபட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கு உந்துசக்தியாக இருந்துள்ளனவா? என்றெல்லாம் பன்முகப் பார்வையை செலுத்துமிடத்து விடை திருப்திகரமானதாக இல்லை. மாறாக நாட்டின் ஐக்கியத்துக்கும், ஒருமைப்பாட்டுக்கும் குந்தகத்தை ஏற்படுத்தி நாட்டை அழிவும் பாதைக்கு இட்டுச்செல்வதற்கு கடந்தகால மற்றும் சமகால அரசியல் யாப்புகள் வலு சேர்த்துள்ளதாக விமர்சனங்கள் பலவும் இருந்து வருகின்றன.

பல்லின மக்கள் இலங்கையில் வாழுகின்ற நிலையில் சகல இன மக்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஆற்றல் மிக்கதாக அரசியல் யாப்பு காணப்படுதல் வேண்டும். எனினும் இதன் சாதக விளைவுகள் இலங்கையின் அரசியல் யாப்பில் குறைவாகவே காணப்பட்டன. அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் அனைத்து இன,மத குழுமங்களையும் உள்ளடக்கி பொதுவான அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எந்தவொரு இனத்திற்கும்,மதத்திற்கும் அந்நாடுகளின் அரசியல் யாப்புகள் வரையறுக்கப் படவில்லை. ‘இந்தியா ஒரு இறைமையுள்ள, சமதர்ம, மதச்சார்பற்ற சனநாயகக் குடியரசாகும். இது நாட்டின் சகல பிரசைகளின் நீதியையும், சுதந்திரத்தையும், சமத்துவம் மற்றும் தோழமையையும் பாதுகாக்கும்’ என்று இந்திய அரசியல் யாப்பு வலியுறுத்துகின்றது. இந்த இலட்சியபூர்வ சிந்தனைகள் அடிப்படை கட்டமைப்பை பிரதிபலிப்பதுடன், இவை திருத்தத்திற்கு உட்பட முடியாத அல்லது மாற்ற முடியாத ஒன்றாகவும் காணப்படுகின்றன. சமஷ்டிக் கோட்பாடும் இத்தகைய இலட்சிய பூர்வமான சிந்தனைகளின் ஒரு வெளிப்பாடாகவே உள்ளது.

இலங்கையின் கடந்தகால மற்றும் சமகால அரசியல் யாப்புகளின் அதிருப்தியான வெளிப்பாடுகளை கருத்தில் கொண்டு ஏற்கனவே பல தடவைகள் புதிய அரசியல் யாப்பினை முன்வைக்கும் நடவடிக்கைகள் ஆட்சியாளர்களால் முடுக்கிவிடப்பட்டன. எனினும்அரசியல்இழுபறி நிலைமைகள்மற்றும் இனவாதிகளின்கொக்கரிப்புக்கள்என்பவற்றுக்கு மத்தியில் இவையனைத்தும் சாத்தியப்படாமல் போனது. இதனிடையே சமகால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றி கோலோச்சும் நிலையில் அரசியல் யாப்பு உள்ளிட்ட பல முக்கிய விடயங்களில் மாற்றங்களைக் கொண்டு வர உத்தேசித்துள்ளது. புதிய அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்படவுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்தார். இதனிடையே விரைவில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வரை 13 ஆவது திருத்தச் சட்டமும், மாகாண சபை முறைமையும் தொடருமெனவும், அதற்கமைய எதிர்வரும் 2025 ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி புதிய அரசியல் யாப்பிலேயே தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை உள்வாங்க முடியும். புதிய அரசியல் யாப்பானது பிரிவினைக்கானதாகவன்றி, இலங்கை எனும் ஒருமித்த நாட்டை இலக்காகக் கொண்டதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

### மலையக சமூக அபிவிருத்தி

அரசாங்கம் புதிய அரசியல் யாப்பினை முன்வைப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் மலையக மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பலவற்றுக்கும் புதிய யாப்பினூடாக உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை பாராளு மன்ற உறுப்பினர் வி. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளமை நோக்கத்தக்கதாகும். மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதும் அம்மக்களின் அடிப்படை பிரச்சினைகள் கூட இதுவரை தீர்த்து வைக்கப்படாத ஒரு நிலையே காணப்படுகின்றது. அரசியல், பொருளாதாரம், தொழில்வாய்ப்பு, சுகாதாரம்,மருத்துவம் என்று இன்னோரன்ன துறைகளிலும் இம்மக்களை அபிவிருத்தி காணச் செய்ய வேண்டியுள்ளது. இந்நிலையில் புதிய அரசியல் யாப்பு இவ்விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமேயாகும்.



இதேவேளை கடந்த காலத்தில் புதிய அரசியல் யாப்பினை முன்வைக்கும் நோக்கில் பொதுமக்கள்கருத்தறியும் குழு ஏற்படுத்தப்பட்டு புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பொதுமக்களின் இன்னோரன்ன கருத்துக்கள் பலவும் உள்வாங்கப்பட்டன. இதன்போது புதிய அரசியல் யாப்பில் மலையக சமூக அபிவிருத்தி தொடர்பில் உள்ள உள்ளீர்க்க வேண்டிய பல்வேறு விடயங்களை மலையக நலன் சார்ந்த அமைப்புக்களும், தனிநபர்களும் கருத்தறியும் குழுவிடம் முன்வைத்திருந்தனர். இவை குறித்து நாம் நோக்குதல் பொருத்தமாகும். குறிப்பாக சமுதாய சபை என்ற ஒன்று ஏற்படுத்தப்பட்டு மலையக மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். சமுதாய சபை என்பது ஒரு வெளிநாட்டுத் தழுவலாகும். பெல்ஜியம், சுவிட்சர்லாந்து போன்ற பல நாடுகளில் சமுதாய சபை நடைமுறையில் உள்ளது. இதனை ஒத்த வேறு பல சபைகளும் காணப்படுகின்றன. சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிடமும் சமுதாய சபை தொடர்பான முன்வைப்புக்கள் ஏற்கனவே இடம் பெற்றிருந்தன. சமுதாய சபை ஏற்படுத்தப்பட்டு பிரதிநிதிகளின் ஊடாக நடவடிக்கைகளின் கையாளுகை இடம்பெறுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் 9 மாகாணங்களில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு இரண்டு மாகாணங்கள் உள்ளன. சிங்கள மக்களுக்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உலகப் புலம் பெயர்ந்தோர் தினக் கொண்டாட்டம்: ஈழத் தமிழர் நலன்?

சட்டவாளர் **ஆதி**

உலகப் புலம் பெயர்ந்தோர் தினம் *(Pravasi Bharatiya Divas)* என்பது இந்தியாவில் புலம்பெயர் இந்தியர்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புகளை பாராட்டுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 9-ஆம் தேதி கொண்டாடப்படும் சிறப்பு நிகழ்வு. இதன் மூலம், இந்தியா மற்றும் புலம்பெயர் சமுதாயம் இடையே உள்ள உறவுகளை வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



2024 ஆம் ஆண்டு, உலகப் புலம் பெயர்ந்தோர் தின நிகழ்வுகள் சென்னையில் ஜனவரி 13 மற்றும் 14 தேதிகளில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வு, உலகின் பல பகுதிகளிலிருந்து புலம்பெயர் இந்தியர்கள், தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு, பல்வேறு துறைகளில் இந்தியர்களின் பங்களிப்பு மற்றும் எதிர்காலத்திற்கான நோக்கங்களை விவாதிக்கும் முக்கிய சந்திப்பாக அமைந்துள்ளது.

**ஈழத் தமிழர் நலனுக்கான முக்கியத்துவம்**

இந்த நிகழ்வில் ஈழத் தமிழர் நலன் குறித்து பேசப்படுமா என்பது தொடர்பாக உறுதியான தகவல் இல்லாததாலும், இது தொடர்பான விவாதங்கள் நிகழ்ச்சி கருப்பொருள்களுடன் தொடர்புடையதா என்பதையும் அறிய வேண்டும்.

ஈழத் தமிழர்கள், தங்கள் பாரம்பரியத்தின் அடையாளமாகவும், தமிழ் மொழி மற்றும்



கலாச்சாரத்தை உலக அளவில் பரப்பிய முக்கிய சமூகமாகவும் விளங்குகின்றனர். புலம்பெயர் தமிழர்களின் பண்பாடு, பொருளாதாரம், கல்வி, மற்றும் மனித உரிமைகள் போன்ற பல துறைகளில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

**அவர்களின் நலன்களை முன்வைக்க வேண்டிய காரணங்கள்:**

**1. மனித உரிமைகள் மற்றும் ஆதரவுகள்: ஈழத் தமிழர்கள் பல பிரச்சினைகளுக்கு ஆளாகி, உலகின் பல பகுதிகளில் நலன்களை மேம்படுத்துவது தேவை.**

**2. மொழி மற்றும் கலாச்சாரம்: தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை காப்பாற்றவும், பரப்பவும் ஈழத் தமிழர்களின் பங்கு முக்கியமானது.**

**3. அரசியல் ஆதரவு: இந்திய அரசின் பரிந்துரைகளில் ஈழத் தமிழர் நலன்களுக்கு இடமளிக்க வேண்டும்.**

**நிகழ்வில் ஈழத் தமிழர் நலனைக் கொண்டுவரும் வழிகள்**

**1. பரிந்துரை மற்றும் அமர்வுகள்: ஈழத் தமிழர் நலனை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகள், இந்த விழாவில் தங்களது கோரிக்கைகளை முன்வைக்கலாம். அப்படி முன் வைக்க நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அனுமதிப்பார்களா என்பது கேள்விக்குறி தான்.**

**2. இந்நிகழ்வில் பங்கேற்கும் சமூக ஆர்வலர்கள் ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து சமூக ஆர்வலர்கள், பேச்சாளர்கள் பேசுவாங்களோ? என்பதும் உறுதியாக தெரியவில்லை. இந்திய தேசிய நலன்கள் இதில் மையப்படுத்தி நடப்பதால் இதில் ஈழத்தமிழர் நலன் குறித்து விவாதிக்கப்படுவது இயலாத ஒன்று: அப்படியே நடந்தாலும் இலங்கை அரசின் அனுசரணையோடு கூடிய தீர்வுத் திட்டம் தான் பெரும்பாலும் முன் வைக்கப்படும்!**

ஆனால் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஈழத் தமிழர்களின் பொருளாதார முன்னேற்றம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகளை வளர்த்தெடுக்க உதவும் திட்டங்களை அரசிடம் வலியுறுத்த உதவும்!

இந்நிகழ்வில் பங்கேற்பதன் வாயிலாக உலகம் முழுவதும் புலம்பெயர் சமூகங்களின் துன்பங் களை மற்றும் பங்களிப்புகளை பிரதிபலிக்க ஒரு மேடையாக பயன்படுத்தலாம் அதன்படி, இதற்காக, ஈழத் தமிழர் அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களைச் சிறப்பாக பிரதி நிதித்துவப்படுத்தி, இந்த விழாவில் பங்கேற்று ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை இந்திய அளவில் துல்லியமாக

• • •

## தொடர்ந்து ... தொடர்ச்சி ...

இவர்கள் அனைவரையும் திருகோணமலை நீதிமன்ற நீதிபதி அர்யூன் அரியரெட்ணம் பார்வையிட்டு விசாரணைகள் மேற்கொண்டிருந்தார்.

மேலும் பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு தேவையான உணவு உட்பட அத்தியாவசிய தேவைகளை மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் உட்பட அரச திணைக்களங்களும், காவல்துறையினரும், தொண்டு நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

மியன்மார் நாட்டில் 12 வருடகாலமாக தாம் புனர்வாழ்வு முகாம்களில் வசித்து வந்ததாகவும் பின் கடந்த 18 மாதங்களுக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறியதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மூன்று படகுகளில் 120 பேர் வருகை தந்ததாகவும் இடைநடுவே இரண்டு படகுகள் பழுதடைந்ததாகவும் இதனால் ஒரு படகில் மற்றைய படகில் வந்த நபர்களும் சேர்ந்து பயணித்ததாகவும் குறிப்பிடுகின்றனர். அத்துடன் வரும் வழியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பேர் பசியினால் உயிரிழந்ததாகவும் அவர்களின் உடல்களை கடலில் வீசிவிட்டு வந்ததாகவும் அந்த குடும்பத்தில் ஒரு சிறுமி உயிர் தப்பி தம்முடன் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா இந்த அகதிகளை பார்வையிட்டு அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக அரச அதிகாரிகளுடனும் காவல்துறையினருடனும் கலந்துரையாடியிருந்தார்.

## ஏமனின் உட்கட்டு ... தொடர்ச்சி ...

துள்ளதாக ஏமனின் குதீஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் தாக் குதல்களும், குதீஸ் அமைப்பின் தாக்குதலும் ஒரே சமயத்தில் நிகழ்ந்துள்ளன.

குதீஸ் அமைப்பினரின் ஏவுகணைகளை தாம் சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ள போதும் ரெல் அவிவ் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்று முற்றாக அழிந்துள்ளதாக அந்த பகுதி தகவல்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேலின் வான்பாதுகாப்பு ஏவுகணைகளால் ஏமனின் ஏவுகணைகளை தடுக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

## இந்திய பயண ... தொடர்ச்சி ...

படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் இதுவரை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை.

இதனையடுத்து, உரிய முன்மொழிவுகள் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# தேசத்தின் தலைமையைப் பாசத்தூய்மையுடன் நேசித்த கலாநிதி சதாசிவம் மகேஸ்வரன்!



எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரியவராக வாழ்ந்து.. எமது ஈழத்தாயகத்தின் விடிவு நோக்கிய விடுதலைப் போராட்டத்தின் ஓர் உறுதி வாய்ந்த திறமைமிக்க ஆளுமையாக விளங்கி இன்று இறைபதமடைந்த எனதன்பு நண்பன் ‘பெரிய மகேஸ்வரனது’ பேரிழப்புக் குறித்த எனது ஆழ்ந்த அனுதாபங்களை முதலிற் பதிவு செய்ய விரும்புகின்றேன்!

நண்பன் மகேஸ்வரன்....இலண்டனிலே... ‘எட்மன்றன்’(Edmonton) பகுதியிலுள்ள மேனாள் ‘மிடில்ஸ்செக்ஸ் பல்தொழில் நுணுக்கக் கல்வி நிலையத்தில்;’ (Middlesex Polytechnic)... இன்றைய ‘மிடில்ஸ்செக்ஸ் பல்கலைக்கழகத்தில்’ ( Middlesex University) 1970களின் பிற்பகுதிகளில் எனது பொறியியற் பட்டப்படிப்புக் காலத்தில் எனக்கு அறிமுகமான ஏறக்குறைய நாற்பது அல்லது ஐம்பது மாணவர்களைக்கொண்ட ஒரு வகுப்பறைத் தோழமைகளில்’ ஒருவராகவே எனது வாழ்க்கைப் பயணத்தில் வந்திணைந்தவர் என்பேன்!

தாயகப் பிரிவின் தாகங்களின் தாக்கங்களோடு... ஒரு மிகப்புதிய புலம்பெயர் வாழ்க்கைச் சூழலிலே... நாளாந்தம் எதிர்கொள்ளக் கூடிய ‘உழைப்பின் வழி பிழைப்பு’ ‘பிழைப்பின் வழி படிப்பு’ எனும் நிலைகளுக்கான சவால்கள் சோதனைகளின் மத்தியில்.. ஒரு கூட்டுப் பறவைகளாகநாம்வாழ்ந்தஅந்தவாழ்க்கையினூடுஎனக்கும் நண்பன் மகேஸ்வரனுக்குமிடையிலான நட்புறவு தொடர்ந்து வந்தது!

அக்காலங்களில் நான் எனது சக தோழர்களுக்கு மாலை நேரங்களில்.. ஒரு கூட்டுப் படிப்பினை நிகழ்த்தி வந்த காரணத்தினால்.. அவர்கள் என்மீது கொண்ட அன்பின் நிமித்தம் என்னை ‘மாஸ்டர்’ மாஸ்டர்’ என அழைத்து வந்ததன் விளைவாக... மகேஸ்வரனும்.. என்னை அன்று தொட்டு.. ‘மாஸ்டர்’ என்றே அழைத்து அன்பு காட்டி வந்தமை என்னை நெகிழவைப்பதுண்டு! பொறியியற் கல்வியில் முதல் வகுப்பிற் தேறிக் கலாநிதிப் பட்டம் வாங்கிய பெருமைக்குரியவர் நண்பன் மகேஸ்வரன் அவர்கள்! இலண் டன் போக்குவரத்துச் சேவையில் முக்கிய பதவி வகித்து வந்த காலங்களிலும் எமது தொழில்சார் உறவுநிலை தொடர்ந்து கொண்டேயிருந்தது!

இதற்கு மத்தியிற்றான் எங்கள் தாயக விடுதலைப் போராட்டப் பயணத்தில் இவரது பங்களிப்பினையும் அவ்வப்போது பகிர்ந்து கொள்கின்ற வாய்ப்புகளும் தருணங்களும் எனக்குக் கிட்டியுள்ளன!

எனது தமிழ், தமிழவை சார்ந்த பயணத்தினையும்.. எனதுதனிப்பட்ட பொறியியல் முகாமைத்துவ மேலாண்மை தலைமைத்துவ வினைத்திறன் அனுபவம் சார்ந்த எனது அனுபவங்களையும் அவ்வப்போது பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒருசிலரில்.. மகேஸ்வரனும் ஒருவராக இருந்து வந்துள்ளதோடு எனக்கு ஊக்கமும் உந்து சக்தியும் அளித்து வந்துள்ளார்!

## லண்டன் புலவரின் இதயவேதனை வரிகள்

எமது தாயகத்தின் தலைமைமீதும் தலைவர் மீதும் விடுதலைப் போராட்ட நீரோட்டத்தின் மீதும் இவருக்கிருந்த அளப்பரும் ஈர்ப்பும் ஈடுபாடும் இணைப்பும் ஓர் அமைதியான ஆரவாரமற்ற ஆர்ப்பாட்டங்களற்ற அமைதியான நெறியிலேயே அமைந்திருந்ததை எம்மால் உணரக் கூடியதாக இருந்துள்ளது.

குறிப்பாகத் தளபதி கிட்டு இவர்மீது கொண்டிருந்த சகோதரத்துவ நட்புறவும்.. இவரது நிமிர்வான உறுதியான உரமான அறிவியல் முகாமைத்துவ மேலாண்மைத் தகைமைகள் மீது கொண்டிருந்த நம்பிக்கையும் பல தடவைகளில் வெளிப்பட்டு வந்துள்ளன!

தளபதி கிட்டுவின் நிழலெனத் தொடர்ந்து அவரது நிகழ்வுகளிற் பங்குகொண்டு வந்த இவர்... தமது சொந்த வாழ்விலும் பல சவால்களையும் சோதனைகளையும் இடர்பாடுகளையும் அனுபவித்தோடு. இவரது தந்தையார்.. சதாசிவம் மற்றும் இவரது உடன்பிறப்புகளும் பல்வேறான ஈகங்கள் வீரங்கள் தியாகங்களை இயற்றியமை பற்றிய பல தகவல்களை நமது போராட்ட வரலாறு பதிவு செய்துள்ளதனை நாமறிவோம்!

**தற்காலப் பூகோள வல்லாதிக்க இயக்கச் சூழலில்.**

**இலங்கை ஆட்சி மாற்றத்தின் பின்னணியில்.**

**எமது மண்ணினதும் மக்களினதும் இறைமை மீட்பினையும்...**

**அவர்தம் அமைதியான நிறைவான எதிர்கால வாழ்வியல் நிலைப்பினையும், நில நீர் கடல், மனிதவள மற்றும் பொருளாதார வள விருத்தியையும் மேம்பாட்டினையும் நோக்கிய...**

**ஒரு சரியான திட்டமிடற் செல்நெறியோடும் செம்மைநிறை கூடிய...**
**செயற்பாட்டு முறைமைகளோடும்**

அரசியல் சமூகவியல் பொருளியல் வழிகாட்டல்களை வழங்கவல்ல தலைமைத்துவ ஆளுமைகளுக்கான தேவையானது உச்சநிலையினை எட்டியிருக்கின்ற ஒரு காலகட்டத்தில்..

ஆழ்ந்த பொறியியல் தொழில்நுட்ப மேலாண்மை அனுபவமும் தேசப் பற்றும் தலைமைத்துவ ஈடுபாட்டுடன்இணைந்தவாழ்வியல்அனுபவமும் கொண்ட ஒரு தேசப்பற்றாளனது இழப்பு ஒரு பேரிழப்பாகவே இன்று எம்மனைவராலும் எதிர்கொள்ளப்பட்டுள்ளது!



இறுதியாக.. ஒரு சில மாதங்களின் முன்னர் என்னைக் கண்டதும் ஓடோடி வந்து என்னுடன் பேசியதோடு தனது இரு பெண்மக்களையும் எனக்கு அறிமுகப்படுத்திச் சென்ற எனது கல்விக் காலச் சகோதரத்துவநண்பன்.. பொறியியற் கலாநிதி மகேஸ்வரனது புன்னகை நிறைந்த முகம் என்னுட் பசுமையாகப் பூத்து நிற்கின்றது!

நேர்படப்பேசும்.. நெஞ்சுரமும்... நேர்மைத் திழறனும். அறச் சீற்றமும் அன்பு ஆற்றலும் தன்னம்பிக்கையும் தளராத உறுதியும் கொண்டு எமது அகிலத்தமிழர் சமூகத்தின் பொறுப்புள்ள புரிந்துணர்வுள்ள ஒரு பிரஜையாகவும்... ஒரு நம்பிக்கைக்குரிய நண்பனாகவும்தாய்நாட்டிற்கான ஒரு தகைமை சால் தூதுவனாகவும் தாயகக் கனவுகளோடு உலவிய ஓர் அருமையான எனது நண்பனின் இழப்பினைப்; பிரிவுத் துயரோடு நெஞ்சிலேந்தியவாறு.. மரண மிலா வாழ்வு கொண்ட அவனுக்கு விடை கூறியவாறு... அவரது பேரிழப்பினாற் துயருறும் அவரது துணைவியார் பிள்ளைகள்..குடும்பத்தினர்.. உடன்பிறப்புகள்.. உறவினர் நண்பர்கள் தாயக மக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து....

அவரது ஆத்மா தாயகத் தலத்தில்.. இறைநிழலில் அமைதிகொள்ள வேண்டி அமைகிறேன்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
‘அன்பே தமிழ்! அதிலே அமிழ்!’

**அன்புரிமையுடன்...**
**புலவர் சிவநாதன்**
**காப்பாளர் தமிழவை**

# இந்தியாவின் நகர்வும் தமிழர்களின் இராஜதந்திரமும்



வேல்ஸில் இருந்து
அருஸ்

இலங்கை அதிபர் அனுரகுமாரா திஸநாயக்காவின் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கான பயணம் அமைந்துள்ளது என்பது பிராந்திய வல்லரசை சமாளிக்கும் முன் முயற்சியாகும். 21 பீராங்கி வேட்டுக்களை முழங்கி அவரை இந்தியா வரவேற்றுள்ளதும், இரு நாடுகளும் பூகோள அரசியல் அழுத்தங்களில் சிக்குண்டு தமக்கான மீட்சியை தேடும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.



இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் இன்று வரையிலும் இலங்கையில் ஐந்து அரச தலைவர்கள் பதவிக்கு வந்துவிட்டனர். அந்த ஐந்து பேருடனும் இந்தியா தனது உறவை வளர்ப்பதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த ஐந்து அரச தலைவர்களின் வருகை என்பது அங்கு வலிந்து உருவாக்கப்பட்ட ஆட்சி மாற்றங்களின் விளைவுகள் என்பதை இந்தியா அறியும். அதில் இந்தியாவின் பங்கும் உண்டு என்பதையும் மோடி அறிவார்.

இலங்கையை பொறுத்தவரையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவிடுவதுடன் சிங்கள மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் அது தான் முதலாவது பணியாக உள்ளது. ஆனால் அதற்கான அனைத்துலக சூழல் சரியாக இல்லை. அதனைக் கட்டுப்படுத்தும் வல்லமையும் இலங்கையிடம் இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பெரும் வளர்ச்சி கண்ட அதன் சனத்தொகை அதற்கு தேவையான பொருளாதார வளர்ச்சி என்பன தற்போதுள்ள பூகோள அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ளது. அதாவது இலங்கைக்கு எவ்வாறு இந்தியா மற்றும் சீனா என்ற இரு பெரும் பிராந்திய வல்லரசுகளை சமாளிக்க வேண்டியுள்ளதோ அதனைப் போலவே இந்தியாவுக்கும் அமெரிக்கா ரஸ்யா என்ற இரு பெரும் உலக வல்லரசுகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

மலிவு விலையில் கிடைக்கும் ரஸ்யாவின் எண்ணெய் மூலம் வளர்ந்துவரும் இந்தியாவின் பொருளாதாரத்தின் மீது அமெரிக்கா தொடர் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. கடந்த வருடம் பெப்ரவரி மாதம் அதானி குழுமத்தின் மீது ஹின்டன்பேர் நிறுவனம் மேற்கொண்ட குற்றச்சாட்டுக்களால் ஏற்பட்ட இழப்புக்களில் இருந்து அந்த நிறுவனம் மீள்வதற்கு முன்னர் கடந்த ஒக்டோபர் மாதம் மீண்டும் அமெரிக்கா தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அமெரிக்காவில் போடப்பட்ட வழங்கு மற்றும் கடந்த வருடம் வெளியிடப்பட்ட அறிக்கைகளினால் அதானி குழுமம் சந்தித்த இழப்பு 150 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாகும். இது இலங்கையின் மொத்த உற்பத்தியின் ஏறத்தாழ இரண்டு மடங்காகும்.



அதானி குழுமம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் கொள்கலன் இறங்கு துறையின் அபிவிருத்தி திட்ட நிதிப் பங்களிப்பில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றும் வரை மோதல்கள் தற்போது வலுத்துள்ளது. தற்போது ஏறத்தாழ 3 றில்லியனாக இருக்கும் இந்தியாவின் பொருளாதாரம் 2030 ஆம் ஆண்டு 10 றில்லியன் டொலர்களாக வளரவேண்டும் என இந்தியா எதிர்பார்க்கின்றது. ஆனால் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்த நாட்டிலும் அதனை சுற்றியுள்ள நாடுகளிலும் அரசியல் உறுதித்தன்மை இருக்க வேண்டும். சுற்றி உள்ள நாடுகளின் பாதுகாப்பு மற்றும் உறவுகளும் முக்கியம்.

எனவே தான் மோடி 2015 ஆம் ஆண்டு அயல்நாடுகள் முதன்மையாவை என்ற கோசத்துடன் பிராந்தியத்தில் (இந்து சமுத்திர) உள்ள எல்ல நாடுகளினதும் பாதுகாப்பும், வளர்ச்சியும் முக்கியம் Security and Growth for All in the Region (SAGAR) என்ற திட்டத்தை மொறிசியஸ் நாட்டுக்கு கடற்படைக் கப்பல் ஒன்றை வழங்கி வைத்து ஆரம்பித்திருந்தார்.

ஆனால் அந்த திட்டம் இலங்கை, மாலைதீவு, பங்களாதேசம் போன்ற நாடுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் ஆட்டம் காண



ஆரம்பித்துவிட்டது. மேலும் 2017 ஆம் ஆண்டு சீனா முன்வைத்த பட்டுப்பாதை திட்டத்தில் கையொப்பமிடாத நேபாளம் தற்போது அதனை ஏற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளது. இந்த மாதத்தின் ஆரம்பத்தில் நேபாள பிரதமர் சீனாவுக்கு சென்றதும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வீழ்ந்த அடியாகவே பார்க்கப்படுகின்றது.

எனவே தான் இலங்கையுடன் ஒரு மென்போக்கை கடைப்பிடிக்க இந்தியா விரும்புவதை இரு நாட்டு தலைவர்களும் இணைந்து டிசம்பர் 16 ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையில் காணக் கூடியதாக இருந்தது. தேசிய மக்கள் சக்தி எதிர்த்த பொருளாதார தொழில்நுட்ப கூட்டுறவு உடன்பாடு (Economic and Technology Cooperation Agreement (ETCA)) தொடர்பில் அதில் அதிகம் பேசப்படவில்லை. அதன் மூலம் இந்தியாவில் இருந்து வரும் தொழில்சார் நிபுணர்களால் உள்ளூர் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது இலங்கையின் வாதம்.



அதேபோலவே, தேசிய மக்கள் சத்தியினால் அரச தலைவர் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின்போதும் பேசப்படாத 13 ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியா வாய்திறக்கவேயில்லை.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அஸாட்டின் பதவி விலகல் ஈரானின் செல்வாக்கில் ஏற்படுத்தியுள்ள பின்னடைவு

## இறுதிப்பகுதி

ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு உக்ரேன் அரசின் பிரதிநிதிகள் எச்ரிஎஸ் *(HTS)* தீவிரவாதிகளுக்கு பயிற்சியளித்தது தொடர்பாகவும், சட்டவிரோத ஆயுத விற்பனையில் ஈடுபட்டது தொடர்பாகவும், தங்களிடம் நம்பத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஈரான் தெரிவித்தது. எச்யுஆர் *(HUR)* அமைப்பு தீவிரவாதிகளுக்கு தொழில்நுட்ப ரீதியிலான உதவிகள் வழங்கியது மட்டுமன்றி, யுத்த களத்தில் ஆளில்லா விமானங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும் தீவிரவாதிகளுக்குப் பயிற்சியளித்திருப்பதாகவும், ஈரான் உறுதிபடத் தெரிவித்திருக்கிறது.



அதுமட்டுமன்றி, தீவிரவாதிகளுக்கான ஆயுதங்களை வழங்கும் செயற்பாட்டில், சட்டவிரோத முகவர்கள் ஊடாக, உக்ரேன் நடுவராகச் செயற்பட்டிருக்கிறது என்றும் ஈரானிய வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன. சிரியாவில் உறுதியற்ற ஒரு நிலையை ஏற்படுத்தி, பிராந்தியத்தில் ஈரானின் செல்வாக்கைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று ஈரானிய அரசியல்வாதிகள் தெரிவிக்கிறார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு கீவ் நிர்வாகம் இதுவரை எந்தப் பதிலும் தெரிவிக்கவில்லை. ஆளில்லா விமானங்களை இயக்குவது போன்ற தொழில்நுட்ப ரீதியிலான விபரங்கள், ஆயுத விநியோகப் பாதைகள் என்பவற்றைச் சான்றாக வைத்தே இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்று ஈரானிய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தெஹ்றானுக்கும் கீவுக்கும் இடையே மோதல் நிலை குறிப்பாக ரஷ்யாவுக்கு ஈரான் ஆளில்லா விமானங்களை வழங்கியிருக்கின்றது என்ற உக்ரேனின் ஆதாரமற்ற குற்றச்சாட்டின் பின்னர், மேலும் அதிகரித்திருக்கிறது. சிரியாவின் தற்போதைய நிலைமை தொடர்பாக, ஈரானின்வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அறாக்சி பல விடயங்களைத் தெரிவித்திருக்கிறார். எதிர்ப்பு அச்சைச் சீர்குலைப்பதற்காக சீயோனிஸ்டுகளும் அமெரிக்காவும் இணைந்து எடுத்த நடவடிக்கைகள் இவை என்று அவர் கருத்துத் தெரிவித்தார். ஈரானின் தேசிய பாதுகாப்புக் கருதி சிரியாவிலுள்ள ஐஎஸ்ஐஎஸ் *(ISIS)* போராளிகளை எதிர்த்துப் போராடிய வேண்டிய சூழல் ஈரானுக்கு இருக்கிறது என்றும் அவர் மேலும் தெளிவுபடுத்தினார்.

ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாதிகளைத் தோற்கடிக்கும் செயற்பாட்டில், இஸ்லாமிய புரட்சிப் பாதுகாப்புக் கட்டமைப்பின் கட்டளை அதிகாரியான கஸெம் சொலைமானி பொறுப்பாக இருந்தார் என்றும், ஈராக் மற்றும் சிரிய அரசுகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து, குறிப்பிட்ட பயங்கரவாதக் குழுவை எதிர்த்துப் போராடுவதில் ஈரான் மிகவும் முக்கிய மான பங்கை ஆற்றியது என்றும் அராக்சி சுட்டிக் காட்டினார். ஈராக்கின் உள்ளும் சிரியாவின் உள்ளும் அந்தப் பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராட நாம் தவறியிருந்தால் ஈரானுக்குள்ளே அவர்களை எதிர்த்துப் போராடும் நிலைமை எமக்கு ஏற்பட்டிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். எதிர்த்தரப்பினருடன் உருப்படியான பேச்சுவார்த்தையை மேற்கொள்ளுமாறு தாம் சிரியாவை கோரியதாக அரக்சி நினைவூட்டினார். அஸாட்டுடன் கடைசியாக தான் மேற்கொண்ட சந்திப்பில், சிரிய இராணுவம் உளரீதியாக மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாகவும் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசு காட்டிவரும் தயக்கம் தொடர்பாகத் தனது கவலையை அஸாட்டுக்குத் தெரிவித்ததாகவும் அறக்சி தொடர்ந்து கூறினார். ஈரானைத் தொடர்ச்சியாக நெருக்கடி நிலைக்குள் தள்ளுவதற்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வரும் விடயத்தை ஈரான் நன்கு அறிந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். பாலஸ்தீனர்களையும் எதிர்ப்பு அச்சையும் ஆதரிப்பதில் சிரியா வகித்த பங்கையும் சுட்டிக் காட்ட அவர் தவறவில்லை.

தமிழில்: **ஜெயந்திரன்**

சிரிய விவகாரங்களில் ஈரான் தலையிடவில்லை என்றும், எதிர்த்தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான மற்றும் அமைதியான தீர்வுகளைக் காணுமாறு சிரிய அரசைத் தாம் வலியுறுத்தியிருந்ததாக அறக்சி முடிவாகத் தெரிவித்தார்.

### அண்மையில் சிரியாவில் ஏற்பட்ட நிலைக்கு உண்மையில் யார் காரணம்?

சிரியாவில் தனது செல்வாக்கைத் தொடர்ந்துநிரைநிறுத்தும்விடயத்தில்பாரதூரமான சவால்களை ஈரான் தற்போது சந்தித்துக் கொண்டிருக்கிறது. எதிர்த்தரப்பு ஆட்சியதிகாரத்துக்கு வரும் சூழலிலும், டமஸ்கசுடன் தற்போது தனது மூலோபாய உறவுகளைத் தொடர்ந்து பேணவே ஈரான் விரும்புகிறது. இருப்பினும் பாரம்பரியமாக சிரியா ஈரானுடன் பேணி வந்த உறவை புதிய சிரிய அதிகார மையம் மீள்பரிசீலனை செய்யும் என்று ஈரானிய அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள். எதிர்ப்பு அச்சில் ஒரு முக்கிய நாடாகச் செயற்பட்டு, மத்திய கிழக்கு தொடர்பான மூலோபாயத்தில் பல தசாப்தங்களாக சிரியா ஒரு முக்கிய பங்காளியாக இருந்து வந்திருக்கிறது. சிரியாவின் ஊடாக, லெபனானில் உள்ள ஹிஸ்பொல்லாவை ஆதரித்து, தனது பூகோளரீதியிலான எதிர்பார்ப்புகளை



ஈரான் நிறைவேற்றி வந்திருக்கிறது. இருப்பினும் மேற்குலகம், துருக்கி, வளைகுடாவைச் சேர்ந்த முடியாட்சிகள் போன்றவற்றினால் ஆதரிக்கப்படும் எதிர்த்தரப்பின் எழுச்சி, இந்தக் கூட்டுறவுக்கு ஆபத்தாக அமையலாம். டமஸ்கசில் உள்ள புதிய அதிகார மையத்துடன் இராஜீக ரீதியாகவும் பொருண்மிய ரீதியாகவும் உறவைப் பேணுவதில் தாம் கருத்தாக இருப்பதாக ஈரானிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

இது எவ்வாறிருப்பினும், அரபு நாடுகளுடனும் மேற்குலகத்துடனும் நல்லுறவைப் பேணவிரும்புகின்ற புதிய சிரிய அதிகார மையம், ஈரானிலிருந்து தூர விலகிச் செல்லும் ஆபத்து இருப்பது தொடர்பாக ஈரான் குழப்பமடைந்திருக்கிறது. குறிப்பிட்ட சில எதிர்த்தரப்புக் குழுக்கள் ஈரானிய படைகளின் பிரசன்னத்தையும் சிரியாவில் ஈரான் கொண்டிருக்கும் செல்வாக்கையும் எதிர்க்கக்கூடும் என ஈரான் அஞ்சுகிறது. அவ்வாறு நிகழுமானால் பிராந்திய ரீதியாக ஈரான் அனுபவித்துவரும் செல்வாக்கை அது கணிசமாகவே பாதிக்கும் என்று ஈரானிய அதிகாரிகள் நம்புகிறார்கள். எதிர்த்தரப்பில் உள்ள முக்கிய பங்காளிகள் அனைவரும் அமெரிக்கா, சவூதி அரேபியா, துருக்கிய ஆகிய நாடுகளுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணுவருகிறார்கள். சிரியாவின் செல்வாக்கை இந்த நாடுகள் அனைத்தும் கடந்த காலங்களில் எதிர்த்தே வந்திருக்கின்றன. எதிர்த்தரப்பு ஆட்சிக்கு வரும் பொழுது, ஈரானின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதில் சிரிய ஒரு களமாக மாறும் நிலைமை கூட ஏற்படலாம் என்று ஈரான் அஞ்சுகிறது. அப்படி நடந்தால் அது நிலைமைகளை மிகவும் மோசமாகப் பாதிக்கும்.

இருப்பினும் சிரியாவில் தனது செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, சிரியாவுடன் தான் கொண்டுள்ள பொருண்மிய, பண்பாடு சார்ந்த மற்றும் சமய ரீதியான உறவுகளைத் தொடர்ந்து முன்னெடுக்க ஈரான் திட்டமிட்டு வருகிறது. பிராந்தியத்தில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தும் நோக்குடன், சிரியாவில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் போருக்குப் பின்னரான மீள்கட்டுமானம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அநுரா ஆட்சியில் ... தொடர்ச்சி ...

உரையாடிய அநுரகுமார திசநாயக்காவிடம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மாகாணசபை தேர்தலை உடனே நடத்துமாறு பணித்துள்ளார்.

மாகாணசபை தேர்தல் நடைபெற்றாலும் அந்த 13. வது அரசியல் யாப்பில் உள்ள காணி அதிகாரம், பொலிஷ்அதிகாரம் என்பன பூரணமாக வழங்க கூடியதான மன நிலை மாற்றமும் ஜனாதிபதி அநுராவுக்கு ஏற்பட்டால் மட்டுமே அவர் எதிர்பார்த்த நல்லிணக்கம் ஏற்படும்

அதேவேளை புதிய அரசியல்யாப்பு திருத்தமும் தேசிய மக்கள் சக்தி அரசால் எதிர்வரும் 2027, ல் நிறைவேற்றப்படும் என கூறப்படுகிறது. அதிலும் இனப்பிரச்சனைக்கான தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு கிடைக்கும் விதமான விளங்க கூடிய சொற்கள் அரசியலமைப்பில் உள்வாங்கப்படல் வேண்டும் ஏற்கனவே நல்லாட்சி அரசில் முன்எடுக்கப்பட்டு கைவிடப்பட்ட வரைவானது சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் பாரிய கருத்தாடல்களில் வித்தியாசங்கள் இருந்தன என பலர் குற்றம் சாட்டினர் அவ்வாறான தவறுகள் இன்றி அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் ஏற்க கூடியதாக தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது தெரிவான எட்டு உறுப்பினர்களும் இதனை கவனத்தில் எடுப்பது மிக அவசியமாகும். இல்லை எனில் தனித்தனியாக ஒவ்வொரு கட்சியும் வேறு வேறு விதமாக திட்ட வரைவுகளை வைத்து கருத்துக்களை தெரிவித்தால் இன்னும் மக்கள் மத்தியில் அதிருப்தியே கூடும்.

தற்போதய தேசிய மக்கள் சக்தி பாரா ளுமன்ற உறுப்பினர்களில் 159, பேரும் அறிவாளி என தம்மை கூறினாலும் அவர்களுக்கு அனுபவ முதிர்ச்சி இல்லை என்பதே உண்மை அதில் தமிழ் உறுப்பினர்களாக 13, பேர் உள்ளனர்
உறுப்பினர்கள்:

**யாழ்ப்பாணம் மாவட்டம்**
1. கருணாநந்தன் இளங்குமாரன்
2. சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜன்
3. ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன்

வன்னி மாவட்டம்

4. செல்வராசா திலகேஷ்வரன்
5. மயில்வாகனம் ஜெகதீஷ்வரன்

**மட்டக்களப்பு மாவட்டம்**

6. கந்தசாமி பிரபு

**திருகோணமலை மாவட்டம்**

7. அருண் கேமச்சந்திரன்

பதுளை மாவட்டம்.

8. கிட்ணன் செல்வராசா
9. அம்பிகை சாமுவேல்

மாத்தளை மாவட்டம்

10. சரோஜா போல்ராஜ்

**நுவரேலியா மாவட்டம்**

11. கிட்ணன் கலைச்செல்வி

**இரத்தினபுரி மாவட்டம்**

12. எஷ் பிரதீவ்

**தேசியப்பட்டியல்**

13. இராமலிங்கம் சந்திரசேகரம்

இந்த 13, பேரும் இனப்பிரச்சினை தொடர் பாகவும், அரசியல் தீர்வு தொடர்பாகவும் எந்தளவில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பார்கள் வெறும் தலையாட்டிகளாகவே இருப்பார்கள் என்பதால் ஏனைய தமிழ் உறுப்பினர்கள் வடகிழக்கில் தெரிவான தமிழ்தேசிய கட்சிகளை சேர்ந்த

**இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி.**

1. சிவஞானம் சிறிதரன்
2. துரைராசா ரவிகரன்
3. சண்முகம் குகதாசன்
4. .ஞானமுத்து ஸ்ரீநேசன்.
5. இரா சாணக்கியன்
6. இளையதம்பி ஸ்ரீநாத்
7. கவீந்திரன் கோடீஷ்வரன்
8. பத்மநாதன் சத்தியலிங்கம்.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஷ்**

9. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

**தமிழீழ விடுதலை இயக்கம்**

10. செல்வம் அடைக்கலநாதன்-

**சுயேட்சை குழு**

11. இராமநாதன் அர்சுனா

பதின் மூன்று பேரும் உறுதியாகவும் ஒற்று மையாகவும் செயல்பட்டால் மட்டுமே வடகிழக் கில் மீண்டும் தமிழ்தேசியம் எழுச்சிபெறும் இல்லையேல் எதிர்காலம் இன்னும் பின்னடைவு களை சந்திக்கும்.

இதேவேளை இந்தியாவுக்கு மூன்று நாள் பயணத்தை முடித்து நாடு திரும்பிய ஜனாதிபதி அநுரா பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் நாட்டை காட்டிக்கொடுக்கவில்லை என கூறி நாட்டுக்காக அவர் மேற்கொண்ட விடயங்களை மட்டுமே கூறினார்.

இந்தியப்பிரதமர் மாகாணசபை தொடர் பாக இனப்பிரச்சினை தொடர்பாக பேசிய விட யங்கள் எதையும் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி கூறவில்லை.

அக்கிராசன உரையாக இருக்கலாம், பாராளுமன்ற உரையாக இருக்கலாம் ஜனாதிபதி இனப்பிரச்சனை தொடர்பாக பாராளுமன்றத்தில் வாய்திறப்பதை தவிர்த்து வருகிறார் என்பதே உண்மை.

இனி அடுத்த பயணமாக சீனாவுக்கு செல்லவுள்ளார் எங்கு சென்றாலும் அபிவிருத்தி தொடர்பாக கரிசனையில் உள்ளாரே அன்றி 75, வருடங்களாக புரையோடிப்போன இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கினால் மட்டுமே நாடு நன்மையடையும் என்பதைஉணர மறுக்கும் ஒருவராகவே இவரையும் பார்க்கலாம்.

• • •

## ரஸ்யாவின் ... தொடர்ச்சி ...

குழிகள், குண்டு வீச்சுக்களில் இருந்து பாது காக்கும் காப்பரன்கள் மற்றும் பல நிறுவனங் களுக்கான களஞ்சியங் களை வடிவமைத்து விற்பனை செய்து வருகின்றோம். ரெக்ஸஸ் பகுதியில் எமது நிறுவனம் உள்ளது.

உக்ரைன் மீது தாக்குதல் நடந்து 24 மணி நேரத்தில் நான்கு பேர் பதுங்கு குழிகளை கொள்வனவு செய்துள்ளனர். இதனால் நாம் பல பழைய பதுங்கு குழிகளை புனரமைப்புச் செய்து வருகின்றோம் என அவர் கடந்த செவ்வாய்க்கிழமை(17) பிரித்தானியாவின் த இன்டிபெண்டன்ற் ஊடகத்திற்கு தெரிவித் துள்ளார்.

பதுங்கு குழிகளின் விலை 20,000 டொலர்களில் இருந்து 500,000 டொலர்கள் வரையுள்ளது. சில சிறப்பு பதுங்கு குழிகள் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியானாவை. இந்த வர்த்தகம் தற்போது மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது. 2030 ஆம் ஆண்டு அது 175 மில்லியன் டொலர்களை எட்டிவிடும்.

கடந்த மாதம் 21 ஆம் நாள் உக்ரைனின் டினிப்பர் பகுதி மீது ரஸ்யா இந்த ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. 5,500 கி.மீ தூரவீச்சுக் கொண்ட இந்த ஏவுகணை ஆறு அணுக்குண்டுகளை சுமந்து செல்லும் தகமை கொண்டது.

## இந்தியாவின் ... தொடர்ச்சி ...

ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது மட்டும் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும் என்றும் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்னும் மோடி பேசிவிட்டு கடந்து சென்றுவிட்டார்.

பௌத்த துறவிகளால் எதிர்க்கப்பட்ட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாலம் அமைப்பது என்ற திட்டத்தையும் இந்தியா தவிர்த்துவிட்டது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எரிவாயு வினியோகத்தை மேற் கொள்வது, அதற்கான குழாய்களை அமைப்பது, திருமலையில் எரிசக்தி திட்டத்தை மேற்கொள்வது என்பவற்றையே இந்தியா முன்வைத்துள்ளது.

அதிலும் திருமலையில் அமைக்கப்படும் இந்தியாவின் பொருளாதார மையத்திற்கு வழங்கப்படும் காணிகளில் உள்ள 7,000 தமிழ், முஸ்லீம் குடும்பங்கள் வெளியேற்றப்படுவது கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மன்னார் மற்றும் குச்சவெளியில் உள்ள இயற்கைவளங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவத னால் சூழல் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என்ற எதிர்ப்புக்களும் கிளம்பியுள்ளன.

இந்தியாவின் அதானி குழுமத்தினால் பங்களாதேசத்திற்கு வழங்கப்பட்ட மின்னாசம் தற்போது அந்த அரசினை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் ஆதிக்கத்தை இந்தியாவுக்கு உருவாக்கியுள்ளதும், அதில் இருந்து பங்களா தேசத்தின் புதிய அரசு வெளியேற முற்பட்டுள் ளதையும் தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் முன்னனி பொதுவுடமைக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

அதானி குழுமத்திற்கு செலுத்தப்படவேண் டிய 2 பில்லியன் டொலர்கள் மின்சாரக்கட்டனத்தை செலுத்தமுடியாமல் தினறும் வங்களதேச அரசு தற்போது உலக வங்கியிடம் கையேந்தியுள்ளது. எனவே தான் இலங்கை மிகவும் கவனமாக இந்தியாவை கையாளுகின்றது. அதனை உணர் ந்துள்ள இந்தியாவும் மிகவும் மென்போக்குடன் செங்கம்பளம் விரித்து இலங்கை அதிபரை அதாவது 33 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்திற்கு எதிராக போராடிய குழுவின் தலைவரை வரவேற்றுள்ளது.

இலங்கையை தன்வசப்படுத்தும் நோக் கத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வையும் இந்தியா புறம்தள்ளியுள்ளது. இந்தியா மட்டு மல்லாது கடந்த 10 ஆம் நாள் அனைத்துலக மனித உரிமைகள் தினத்தில் அனைத்துலக நீதிக்கும் உண்மைக்குமான செயல்திட்ட அமைப்பு பிரித் தானியா அரசிடம் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் முன்வைத்த கோரிக்கையையும் பிரித்தானியா புறம்தள்ளியுள்ளது. அதாவது உலகில் உள்ள அத்;தனை நாடுகளாலும் புறம்தள்ளப்பட்ட இனமாக தமிழ் இனம் கடந்த தசாப்தத்தில் முன்னேறியுள்ளது.

இந்தியாவும், அமெரிகாவும் சந்தோசப்ப டும் என்பதற்காக சீனாவை வசைபாடி, ரஸ்யாவை எதிர்த்து, இஸ்ரேலின் போர்க்குற்றங்களுக்கு எதிராக வயைத் திறக்காத தமிழ் கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் இராஜதந்திரம் தான் இந்த ஆண்டின் சிறந்த ரஜாஜதந்திரம் என்பதை நடக்கும் சம்பவங்கள் தெளிவாக காண்பிப்பதாக தமிழ் ஆய்வாளர் ஒருவர் நகச்சுவையாக கூறியது தான் நினைவில் ஊசலாடுகின்றது.

• • •

## தேசிய மக்கள்... தொடர்ச்சி ...

எனவே,கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவு வாக்குகளை அளித்ததனால் தான் தமது இரண்டு உறுப்பினர்களை இழந்துள்ளனர். இதற்குப் பரிகாரமாக தேசிய மக்கள் சக்தி ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினரையே வழங்கியுள்ளது. சரியாகப் பார்த்தால் தேசிய மக்கள் சக்தி அம்பாறை மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்களை தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்திருக்க வேண்டும். இது தான் யதார்த்தம்.

கவலையான செய்தி என்னவென்றால் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் முஸ்லிம்களைப் புறக்கணிக்கும் செயற்பாடுகளை இப்போதே ஆரம்பித்து விட்டனர் என்றார்.

இவ்வாறான நிலையில், திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த மனித உரிமைகள் சிவில் சமூக செயற்பாட்டாளர் எம்.எம்.மஹ்தி முஸ்லீம் மக்களின் நிலை குறித்து தெரிவிக்கையில்,

'இலங்கை வாழ் முஸ்லிம்கள் இந்நாட்டை மீட்டெடுப்பதிலும் சுதந்திரத்தை பெறுவதிலும் பாரிய பங்களிப்புகளை செய்துள்ளார்கள்.

அதே போன்று இந்நாட்டின் பொருளாதாரத்தைஅபிவிருத்தி செய்வதிலும்இந்நாடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட போதெல்லாம் அரசாங்கத்திற்கே நிதி பங்களிப்புகளை வழங்குகின்றவர்களாகவும் ஏற்றுமதி இறக்குமதி துறையில் முன்னணி வகிப்பவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

சிறுபான்மையினமாக வாழ்ந்து வருகின்ற இந்த முஸ்லிம் சமூகம் அரசியல் வரலாற்றில் பல்வேறு உயர் பதவிகளை வகித்ததோடு சபாநாயகராகவும் கூட இருந்துள்ளார்கள்.

2005 இலிருந்து ராஜபக்சர்களுங்கு அரசியல் அதிகாரம் கிடைத்ததில் இருந்து முஸ்லிம் சமூகம் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாக்கப் பட்டார்கள்.

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களில் இடையூறுகளை ஏற்படுத்துவதன் மூலமும் இன ரீதியான அடக்குமுறை, கடும் போக்குகள் காரணமாகவும் ஈஸ்டர் தாக்குதல் மூலம் எந்த ஒரு அடிப்படையும் இல்லாமல் பழி வாங்கப்பட்ட சமூகமாகவும் தங்களது வியாபார நிலையங்கள், பள்ளி வாயில்கள், சொத்துக்கள் அழிப்பு, ஆடை சுதந்திரம் என பல வழிகளிலும் அடக்கி ஒடுக்கப் பட்ட சமூகமாகவும் மாற்றப்பட்டார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக பல அசௌகரியங்களுக்கும் இன்னல்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருந்த முஸ்லிம் சமூகம் தமக்கும் ஏனைய சமூகங்களுக்கு வழங்கப் படுகின்ற அனைத்து உரிமைகளோடும் வாழ இடம் அளிக்கப்பட வேண்டும் என எதிர்பார்த்தார்கள்.

கடந்த காலங்களில் அரங்கேற்றப்பட்ட அநீதிகளுக்கும் விலக்கப்பட்ட சொத்துகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தொடராக ஏமாற்றப்பட்ட முஸ்லிம் சமூகம் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கு கூடுதலான வாக்குகளை வழங்கியிருந்தார்கள்

அதேபோன்று அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் கூட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்மீது பாரிய நம்பிக்கைகொண்டு தமது வாக்குகளை அதிகமாக வழங்கியதோடு இந்த அரசாங்கத்தை அமைப்பதிலே பாரிய பங்களிப்பையும் செய்தார்கள்.

அனைத்து இனங்களும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் மதிக்கப்பட வேண்டும். கடந்த ராஜபக்சர்கள் ஆட்சி காலத்தில் ஏற்படுத்தப்பட்ட துன்பங்களுக்கும் அநீநதிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும். என்கின்ற எதிர்பார்ப்பில் கூடுதல் கரிசனையோடு வாக்குகள் மூலமாக பங்களிப்புகளை செய்த முஸ்லிம் சமூகத்திற்கு ஏமாற்றம் தான் பரிசாக கிடைக்குமோ என்கின்ற அச்சம் ஏற்பட்டு வலுவடைந்து கொண்டிருக்கின்றது.

அமைச்சுகள் வழங்கப்படுகின்ற போதும் அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்படுகின்ற போதும் முஸ்லிம்கள் கணக்கில் எடுக்கப்படாத நிலைமை கவலையை ஏற்படுத்தியிருப்பதாக முஸ்லிம் சமூகம் உணருகின்றது.

அது மாத்திரம் அன்றி ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி இதுவரை வெளியிடப்படவில்லை. பல்வேறு அசம்பாவிதங்களிலும் பொருளாதார ரீதியாக பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு எந்த விதமான இழப்பீடுகளையும் வழங்கப் படாமல் தாமதமாக்கப்படுவது முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே மேற்குறித்த விடயங்களில் இந்த முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்த தீர்வுகள் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

பாரிய அளவில் வாக்குகளை வழங்கியதன் மூலம் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஜனாதிபதியும், இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களும் ஜனாதிபதியும் போன்று நடந்துவிடக் கூடாது என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கும் முஸ்லிம்களுக்கு ஏமாற்றமே தொடராக வந்து விடுமோ என்று அச்சத்திலும் தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கத்திலும் தற்போதைய காலகட்டத்தில் இந்த முஸ்லிம் சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றார்.

இவ்வாறான நிலையில் எந்தவித அழுத்தங்களும் இன்றி நாட்டின் இன பல்வகைத்தன்மையை கருத்திற்கொண்டு ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டின் நிர்வாகத்துறையின் பங்குதாரர்களாக முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியொன்றை உள்ளீர்க்கும் நடைமுறை இருந்து வந்துள்ளது.

எனினும், முதன் முறையாக இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் பத்தாவது பொதுத் தேர்தலுக்கு பின்னர் நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 22 பேர் கொண்ட அமைச்சரவையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. இதனால், தேசிய மக்கள் சக்தியை 61 வீதத்திற்கும் அதிகமான வாக்குப் பலத்துடன் மூன்றில் இரண்டு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்று வலுவான ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவதற்கு பங்குதாரர்களாக இருந்த முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டமை பல்வேறு வகையிலும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

குறிப்பாக, தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் மக்களை அரவணைக்க தவறுகிறதா என்ற கேள்வியும் எழ ஆரம்பித்துள்ளது.

முஸ்லிம்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தி, அதனை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமே தவிர முஸ்லிம் சமூகத்தை அதிருப்திக்குள்ளாக்கும் தீர்மானங்களை எடுக்கக் கூடாது என்பதே பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

## பூகோள அரசிய ... தொடர்ச்சி ...

CLOS) பின்பற்றும் நாடாக இருப்பதால், சீன கப்பல்களுக்கு முழுமையான தடைகள் விதிக்க முடியாத நிலையும் உள்ளது. அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்குக்கு மத்தியில், சிக்கலான புவிசார் அரசியல் பரப்பில் கயிற்றில் நடப்பது போல மிகவும் நிதானமாக காய்களை நகர்த்த வேண்டியவராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இருக்கின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் உருவாகிய பொருளாதார நெருக்கடியின் பாதிப்புக்களிலிருந்து இலங்கை இன்னமும் மீளவில்லை. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா மட்டுமன்றி, சீனாவின் உதவியும் இலங்கைக்கு அவசியம். இதனை உணர்ந்துகொண்டவராகத்தான் ஜனாதிபதி அநுர காய்களை நகர்த்துகிறார்.

தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக புதுடில்லி சென்ற ஜனாதிபதி, அடுத்த மாதம் சீனாவுக்கு செல்லவிருக்கின்றார்.

பொருளாதார மீட்சிக்கு இந்த இரண்டு நாடுகளையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதுதான் அரசாங்கத்தின் பிரச்சினை. அந்த வகையில், ஜனாதிபதியின் புதுடில்லி விஜயத்தை வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். பொருளாதார ரீதியாக இலங்கைக்கு பயனுள்ள பல உடன்படிக்கைகள் எட்டப்பட்டுள்ளன.

இன நெருக்கடியைப் பொறுத்தவரையில், அதனையிட்டு நேரடியாகப் பேசுவதை மோடி தவிர்த்தார். தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேறும் வகையில், இலங்கை அரசியல் அமைப்பு முழுமையாக செயல்படுத்தப்படும் என்று தன்னுடைய எதிர்பார்ப்பை இந்தியப் பிரதமர் மோடி இதன்போது தெரிவித்தார்.

13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக குறிப்பிடாமல், அதனை அமுல்படுத்தலுக்கான ஆதரவான கருத்துகளைதான் பொதுவாக தெரிவித்தார். 13 ஆவது திருத்தம் மட்டுமன்றி 16 ஆவது திருத்தமும் இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பின்னணியில் வந்ததுதான். அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது அவற்றை உள்ளடக்கியதுதான்.

இலங்கை அரசியல் சூழல் மற்றும் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடந்தபோதும், மோடி 13ஆம் திருத்தச்சட்டத்தை குறிப்பிட்டு பேசுவதை தவிர்த்தமைக்கும் காரணம் இருக்கின்றது. 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக கடந்த காலங்களில் கடுமையாகப் போராடிய ஜே.வி.பி.யின் தலைவர்தான் அநுரகுமார. அதனால், அதனைப் பற்றிப் பேசுவது அநுரவுக்கு சங்கடத்தைக் கொடுப்பதாக அமையலாம் என்று மோடி தரப்பு கணக்குப் போட்டிருக்கலாம்.

ஆனால், மோடி சொன்னவைகளைக் கேட்டுக்கொண்டு கொழும்பு திரும்பியுள்ள அநுர, அவற்றை நடைமுறைப்படுத்துவாரா, என்பது முதலாவது கேள்வி! அவர் நடைமுறைப்படுத்தாமல் காலங்கடத்தினால் மோடியினால் என்ன செய்ய முடியும் என்பது இரண்டாவது கேள்வி.

• • •

## அமெரிக்காவுக்கு ... தொடர்ச்சி ...

பேர்பரா துறைமுகப்பகுதியில் அமெரிக்காவின் படைத்தளம் அமைப் பதற்கான அனுமதியை வழங்குவதன் மூலம் எமது நாட்டின் இறைமையை நாம் உறுதி செய்ய முடியும். அதற்கான அங்கீகாரத்தை அமெரிக்கா வழங்குமாக இருந்தால். அது இரு நாடுகளுக்கும் நன்மையானது.

சோமாலியாவில் இடம்பெற்ற உள்நாட்டு போரைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு சோமாலிலான்ட் என்ற பகுதி சோமாலியாவில் இருந்து பிரிந்து சென்றிருந்தது. இந்த போரில் சோமாலியாவின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் சயிட் பார் பதவியில் இருந்து அகற்றப்பட்டிருந்தார். எனினும் அதற்கு அனைத்துலக அங்கீகாரம் கிடைக்கவில்லை.

அங்கு தனியான அரசு அமைக்கப்பட்டு, பாதுகாப்பு படைகள் உருவாக்கப்பட்டு பணமும் அச்சிடப்பட்டு வருகின்றது. எனினும் சோமாலிலான்ட் பகுதியை சோமாலியா தனது நாட்டின் ஒரு மாநிலமாகவே கருதி வருகின்றது. அண்மையில் எதியோப்பியாவுக்கு தனது கடற்கரையின் 20 கி.மீ நீளமான பகுதியை வழங்கும் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்த முற்பட்டபோதும் அதனை சோமாலியா தடுத்துள்ளது.

## புதிய அரசியல்... தொடர்ச்சி ...

பல மாகாணங்கள் உள்ளன. ஆனால் மலையக மக்களுக்கென்று தனியாக எந்தவொரு மாகாணமும் கிடையாது. எனவே நிர்வாக ரீதியான பிரிவுகளை எதிர்காலத்தில் மலையக மக்களுக்கும் ஏற்படுத்த புதிய யாப்பு இடமளிக்க வேண்டும். இதுபோன்றே இலங்கையில் வாழும் சுமார் 15 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களுக்கு இலங்கையின் மாவட்டங்களில் ஒரு மாவட்டமும் கிடையாது. எனவ மலையக மக்களுக்கென்று ஒரு நிர்வாக மாவட்டமாவது இருக்க வேண்டும். அரசியல் யாப்பில் அதிகாரப் பகிர்வு என்பது முக்கிய விடயமாக இருக்கும். இலங்கையில் பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் என்று மூன்று விதமான ஆட்சி முறைகள் காணப்படுகின்றன. மாகாண சபைகளில் மலையக மக்களுக்கென்று எந்தவிதமான அதிகாரமும் இல்லை. இலங்கை என்பது பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் முன்னெடுப்புக்களை மேற்கொண்டார்கள் இது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதேவேளை கீழ்மட்டக் குடியரசு என்று சொல்லப்படுகின்ற உள்ளூராட்சி விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். கிராம இராச்சியங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமான சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும். மலையக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் புதிய பிரதேச சபைகள் ஏற் படுத்தப்பட வேண்டும்.

### செனட் சபை பாதுகாப்பு

இலங்கையின் பல்லின சமூக அமைப்பில் மலையக மக்களும் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்கள். எனவே அவர்களுக்கென்று அதிகாரப் பகிர்வு அலகு ஒன்று உருவாக்கப்பட வேண் டும். புதிய யாப்பின் ஊடாக அது ஏற்றுக் கொள்ளப்படுதலும் வேண்டும். மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா போன்ற பகுதிகளில் இம்மக்களுக்கான பிராந்தியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதனடிப்படையில் அதிகாரப்பகிர்வு இடம்பெறுதல் வேண்டும். செறிந்து வாழுகின்ற மக்களுக்கு மட்டுமல்லாது ஆங்காங்கே பரந்து வாழுகின்ற மக்களுக்கும் அதிகாரப் பகிர்வு அலகுகள் உலக நாடுகளில் வழங்கப்பட்டுள்ளன. நிலத் தொடர்புடைய அதிகாரப் பகிர்வு, நிலத் தொடர்பற்ற அதிகாரப் பகிர்வு என்று வெவ்வேறு விடயங்கள் காணப்படுகின்றன. இவ்விடயமும் கருத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

இந்நாட்டில் ஜனாதிபதி முறைமை இல்லா தொழிக்கப்பட்டாலும் மூன்று சிறுபான்மை இனங்களையும் சார்ந்தவாறு பிரதி ஜனாதிபதிகள் மூவருக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி ஜனாதிபதிகள் இருப்பது ஒரு சிறப் பம்சமாகும். மேலும் மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்பன ஏற்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். செனட் சபையில் மலையக பிரதிநிதிகளுக்கும் இடமளிக்க முடியும். மக்கள் பிரதிநிதிகள் சபையைக் காட்டிலும் செனட் சபையானது சிறுபான்மை மக்களுக்கு மிகுந்த பாதுகாப்பினை அளிப்பதாக இருக்கும் என்று திடமாக நம்ப முடியும்.

மலையக மக்களின் பௌதீக மற் றும் பொருளாதார அபிவிருத்தி குறித்து அரசியல் யாப்பு உறுதிப்படுத்த வேண்டும். தொழில் வாய்ப்புகளில் மலையக மக்களின் விகிதாசாரத் துக்கேற்ப சலுகைகள் வழங்கப்பட வேண்டும். கல்வி, சுகாதார மேம்பாடு கருதிய விசேட முன்வைப்புக்களும் மலையக மக்களை பொறுத் தவரையில் மிகவும் அவசியமாகும். புதிய அரசியல் யாப்பினூடாக மலையக மக்களை ஒரு தனித் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். இதன் மூலம் பல்வேறு சாதக விளைவுகள் ஏற்படும். மலையக மக்கள் சகல துறைகளிலும் குறிப்பிட்ட அபிவிருத்தி இலக்கினை இன்னும் எட்டாதுள்ளனர். அதாவது குறை அபிவிருத்தி நிலை இவர்களிடம் காணப்படுகின்றது. எனவே இம்மக்களின் நலன் கருதி விசேட ஏற்பாடுகள் உள்ளீர்க்கப்பட வேண்டும். இம்மக்கள் அபிவி ருத்தி இலக்குகளை எட்டும் வரை சலுகைக் காலத்தின் அடிப்படையில் விசேட உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படவேண்டும். இந்தியாவில் பின்தங்கிய சமூகத்தினரின் நலன்கருதி விசேட ஏற்பாடுகள் பலவுள்ளன. பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்பு, கல்வி மேம்பாடு என்று பின்தங்கியவர்களுக்கு பல ஒதுக்கீடுகள் உள்ளன. இந்த நிலை இலங்கையின் புதிய அரசியல் யாப்பிலும் இடம்பெறுவது மிகவும் அவசியமாகும். மலையகத்துக்கென தனியான பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் போன்ற கருத்துக்கள் மலையகத்தைச் சேர்ந்த பலராலும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பினை முன் வைக்குமிடத்து மேற்கண்ட விடயங்களை கருத்தில் கொண்டு மலையக மக்களின் நல்வாழ்வுக்கு வித்திட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

• • •

## குடிநீருக்கான ... தொடர்ச்சி ...

வருகின்றது. அன்றுமுதல் திட்டமிட்ட வகையில் அது காசாவுக்கான குடி நீரையும் தடுத்த வரு கின்றது. பொதுமக்களை கொல்லவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இஸ்ரேல் குடிநீரை யும் தடுத்து வருகின்றது என அந்த அமைப்பின் மத்திய கிழக்கிற்கான பணிப்பாளர் லாம பகீத் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள மக்களில் 115 மக்களிடம் நாம் செய்மதி தொலைபேசிகள் மூலம் நேர் காணல்களை மேற்கொண்டிருந்தோம். அவர்கள் கூறிய கருத்துக்கள் உண்மையானவை. இஸ்ரேல் நான்கு வழிகளில் குடி நீரை தடுத்து வருகின்றது.

முதலில் இஸ்ரேலில் இருந்து காசாவுக்கு வரும் நீர் குழாய்கள் மூடப்பட்டுள்ளன. நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கான மின்சாரம் தடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக கழிவுநீர் செல்லும் வழிகளையும் இஸ்ரேல் பார இயந்திரங்கள் மூலம் அழித்துள்ளது. இறுதியாக அதனை திருத்துவதற்கான முயற்சிகளையும் அது வேண்டுமென்றே தடுத்து வருகின்றது.

தொழில்நுட்பவியலாளர்களையும் படுகொலை செய்வதுடன், காசா பகுதிக்கு செல்லும் நிவாரணங்களையும் இஸ்ரேல் தடுத்து வருகின்றது. இது பெருமளவான மக்களை அங்கு படுகொலை செய்வதற்கான திட்டமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இஸ்ரேல் வைத்தியசாலை கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் வைத் தியர்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் ஒரு இனஅழிப்பு என எல்லைகள் கடந்த மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த 14 மாதங்களில் தமது அமைப்பின் மீது 41 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

## கிழக்கு மாகாண ... தொடர்ச்சி ...

இந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியி னர் விசாரணை மேற்கொண்டுவரும் நிலையில் கருணாவை அவர்கள் விசாரணைக்கு அழைத் தனர். அவர் நேற்றுக் கொழும் பிலுள்ள சி.ஐ.டி. அலுவ லகத்துக்குச் சென்று வாக்குமூலம் வழங்கிவிட்டு வெளியேறியுள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கருணா, தம் மிடம் உபவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்து வாக்கு மூலம் பெறப் பட்டதாகத் தெரிவித் தார். தனக்குத் தெரிந்த விபரங்களை இந்த விசாரணையின் போது தான் வழங்கியதாகவும் அவர் தெரி வித்தார்.

## அஸாட்டின் பதவி ... தொடர்ச்சி ...

போன்ற விடயங்களில் ஈரான் கவனம் செலுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈரானுடன் தொடர்புகளைப் பேணுவதில் புதிய அதிகாரமையம் கவனமாக இருக்கும் என்பதையும், ஏதாவது ஒரு தனி அரச அதிகாரத்தில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவே அவர்கள் முயல்வார்கள் என்பதையும் ஈரான் அறிந்துவைத்திருக்கிறது.

இவ்வாறான முற்றிலும் புதிய ஒரு சூழ மைவில், ஈரான்-சிரிய உறவின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கிறது. சிரியாவுடனான பாரம்பரிய உறவுகள் பலவீனமடையும் சூழலில், மாறிவரும் பூகோள அரசியல் சூழல்களுக்கேற்ற வகையில் தனது வியூகங்களை வகுக்க வேண்டிய தேவை தற்போது ஈரானுக்கு ஏற்பட்டிருக்கிறது.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்







